# கிராமாஞ்சலன்

## " கிரா[redacted]னுகூலன் "



**ஸ்ரீமான் K. S. சிவசுப்பிரமணிய ஐயர் அவர்கள் M. L. C.**

வாண்டு லார்டு, குன்னியூர்,

மன்னார்குடி.

ரிஜிஸ்டர் நெ. **M. 1930**] வந்தேமாதரம். [வருட சந்தா ரூபா **2—0—0**

# கிராமானுகூலன்.

[ ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை ]

223469

" ஒன்று பட்டாலுண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கேதுவேண்டும் "—பாரதி.

" நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே."—(ஔவை)



| புத்தகம் 2 | பிரபவஹு பங்குனிமீ விபவஹு சித்திரைமீ | ஸஞ்சிகை 5 |
|---|---|---|



# ஜமாபந்தி.

ஜமாபந்தி என்ற வழக்கம் ஏற்பட்டது முதல் கிராம உத்தியோகஸ்தர்களுக்கு இருந்து வரும் கஷ்டமானது சகிக்கக் கூடியதாயில்லை திவான் பகதூர் V. K ராமானுஜாசாரியார் அவர்கள் சட்ட சபை மெம்பராயிருந்த காலத்தில் ஜமாபந்தியின் கொடுமைகளை அகற்ற சிறிது வழிதேடினார் அதனால் மூன்று மாதங்களுக்குமேல் கஷ்டப்பட்டு வந்தது தானது ஒரு மாதத்திற்கு வரலாயிற்று. வர வர சவுகரியங்கள் உண்டாவதற்கு பதிலாக தொந்தரவுகள் அதிகமாய் விட்டது. மூன்று நாளைக்குள் முடிய வேண்டிய ஜமாபந்திக்கு 30 நாள் முந்திய கர்ணங்கள் வரவேண்டுமென்று தாசில்தார்கள் உத்தரவு போடுவதின் அர்த்தமென்ன 8உ ஜமாபந்தி போட்டிருந்த வட்டத்தின் கர்ணங்கள் 1உ தாலூகாவுக்கு வந்தும் அபராதம் விதிக்கப்படுவானேன். ஜமாபந்தி ஆபீஸர்கள் ஒவ்வொருவரும் வர்த்தனைகள் வாங்கக்கூடாதென்றும் கிராம உத்தியோகஸ்தர்கள் கொடுக்கக் கூடாதென்றும் கெஜட்டில் பிரமாதமாக விளம்பரம் செய்யப்படுகிறது. விளம்பரம் செய்யும் கடுதாசிக்கு உள்ள மதிப்பு கூட அதற்கு ஏற்படுவதாக காணப்படவில்லை. வருஷா வருஷம் விளம்பரம் செய்யவேண்டி யிருப்பதைகொண்டே அந்த வழக்கம் ஒழியவில்லை யென்றும் அதை கெவர்ன்மெண்டார் அறிந்துதானிருக்கிறார்களென்றும் ஏற்படவில்லையா? கர்ணங்கள் ஒவ்வொரு வரும் தனக்கு 40 முதல் 50 ரூ வரையில்சிலவாகி விட்டதாக வருந்துவதை கேட்கையில் மிக வருத்தமாயிருக்கிறது. மூன்றுமாதத்திய சம்பளத்தை ஜமாபந்தியில் செலவழித்து விட்டால் காலக்ஷேபம்செய்வதெப்படி? இதற்கு பரிகாரம் ஜமாபந்தி ஒழிந்தாலொழிய நிவர்த்தியில்லை என்பது திண்ணம். ஆகையால் ஜமாபந்தி என்பதை அடியுடன் நிறுத்திவிட்டு கணக்குகளை முடிப்பதற்கு தகுந்த மார்க்கங்களைத் தேடவேண்டியது கெவர்ன்மெண்டாரின் கடமையாகும். ஜமாபந்தி நடத்துவதினால் யாதொரு நன்மையும் குடிகளுக்காவது கெவர்ன்மெண்டாருக்காவது ஏற்படுவதாகக்காணோம். கிராம உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுத்துவந்த ஜமாபந்தி அலவுன்ஸையும் நிறுத்திவிட்டது அநீதமாகும். செட்டில்மெண்டு ஏற்பட்டு கணக்குகள் ஒழுங்கானமுறையில் அமைக்கப்பட்ட பிறகு ஜமாபந்தி என்பது அநாவசியமே. சில ஆடிட்டர்களை நியமித்து கணக்குகளை கிராமங்களிலேயே சோதனைசெய்து கோஷ்வாராக்கள் தயாரித்து அனுப்பும்படி செய்தால் கெவர்ன்மெண்டா

ருக்கும் லாபமாயும் சுலபமாயுமிருக்கும். கிராம உத்தியோகஸ்தர்களை பிடித்த சனியனும் விட்டகலும். இந்த விஷயத்தில் கவர்ன்மெண்டாருக்கு அதிகசெலவாகுமென்று பயப்படக்காரணமேயில்லை. கலெக்டர் ஜமாபந்தி முகாம் போகும்போது குமாஸ்தாக்கள் முதல் சிப்பந்திகளுட்பட செல்லவேண்டியிருப்பதால் அதற்கு என்ன படிச்செலவுகள் ஆகிறதோ அதைவிட ஜாஸ்தியாகிவிடாது. தவிரவும் கலெக்டர்களும் மற்றவேலைகளை திருத்திக்கொண்டு ஜமாபந்தியில் அதிக காலத்தை வியர்த்தமாக்குவதும் ஒழியும். ஐக்கியநாணயச்சங்கங்களின் கணக்குகள் கிராமத்திலேயே சோதனை செய்யப்படவில்லையா? கிராம பஞ்சாயத்துகளின் கணக்குகளும் கிராமங்களிலேயேதான் சோதனை செய்யப்படுகிறது. கிராம தபாலாபீஸ்களிலும் அப்படியேதான் நடக்கிறது. கிராம உத்தியோகஸ்தர்களின் கணக்குகள் மாத்திரம் சந்நிக்குச்சந்நி அலைவானேன். அதையும் கிராமத்திலேயே சோதனை செய்தால் என்ன. இப்பொழுது தாலூகாகுமாஸ்தாக்களும் டிவிஷனல் ஆபீஸ் குமாஸ்தாக்களும் சோதனை செய்கிறார்கள். அவர்களில் அநேகருக்கு கிராமகணக்குகளின் நம்பர்கூட தெரியாது. எந்த கணக்குடன் எதை ஒத்துக்கொள்ளுவதென்றும் அறியார்கள். அவர்கள் கணக்குகளில் தங்கள் பாராவுடன் கையெழுத்து போட்டுக்கொடுப்பதைத்தவிர வேறொன்றும் அறியமாட்டார்கள். இதில் சிலர் உடனே கையெழுத்து செய்து கொடுத்துவிட்டால் கணக்குகளை சோதனை செய்யவில்லையென்றும் தனக்குத்தெரியவில்லையென்றும் பக்கத்திலிருக்கும் குமாஸ்தாக்களோ மேலதிகாரிகளோ நினைத்துவிடப் போகிறார்களே யென்று சந்தேகங்கொண்டு இரண்டு மூன்று தினங்கள் கர்ணங்களை அலையவைத்து கணக்குகளை சோதிப்பதுபோல் பாவனைசெய்து கையெழுத்துபோட்டனுப்புகிறார்கள். சிலர் தங்களுக்கு கணக்கு தெரிந்ததுபோல் காட்டிக்கொள்ள எண்ணி வேலி அடைப்பைப 6 கெ. கணக்கில் ஏன் கொண்டுவரவில்லையென்றும் 2 கெ. அடங்கலுக்கும் 14 கெ. கணக்குக்கும் ஒத்துக்கொண்டதா வென்றும் கேட்க ஆரம்பித்துவிடுகிறார்கள். இப்பேர்க்கொத்த குமாஸ்தாக்களால் சோதனை செய்யப்படுவதைவிட இதற்கென்று தனியாக பயிற்சி பெற்ற ஆடிட்டர்களைக்கொண்டு கணக்குகளை சோதிப்பதினால் எவ்வளவு நன்மையுண்டாகுமென்பதை நாம் சொல்லத்தேவையில்லை. இதுவிஷயத்தில் கவர்ன்மெண்டார் அவர்கள் தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு ஒரு கமிட்டி நியமித்து விசாரணை செய்தாவது தகுந்த பரிகாரங்கள் தேடவேண்டுமென்று கோருகிறோம். சட்டசபை மெம்பர்களும் இவ்விஷயத்தைகவனித்து வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வார்களென்று நம்புகிறோம்.

## பார்டோலி வரிகொடா இயக்கம்.

பம்பாய் இராஜதானியைச் சேர்ந்த பார்டோலி தாலூகாவில் ரீசெட்டில்மெண்டு செய்யப்பட்டு தீர்வைகள் கூலம்பங்கு உயர்த்தப்பட்டதாக தெரிகிறது. அப்படி உயர்த்தப்பட்ட தீர்வையானது நியாயமல்லவென்றும் தங்களால் செலுத்த முடியாத நிலைமையிலுள்ளதென்றும் உயர்த்தக்கூடாதென்றும் அத்தாலூகா வாசிகள் மகஜர் மூலமாகவும் தீர்மானங்கள் மூலமாகவும் கவர்ன்மெண்டாருக்கு பன் முறையும் தெரிவித்துக்கொண்டார்கள். கவர்ன்மெண்டார் அதற்கு செவிசாய்க்காது தீர்வையை உயர்த்திவிட்டார்கள். அத்தாலூகா வாசிகள் கடைசியாக உயர்த்தப்பட்ட அதிக தீர்வையை செலுத்துவதில்லையென்றும் அதனால் என்ன கஷ்டங்கள் நேரிட்டபோதிலும் அனுபவிப்பதென்றும் ஏகோபித்து தீர்மானித்துவிட்டார்கள். கவர்ன்மெண்டாரும் தங்கள் பிடிவாதத்தைக் கைவிடாமல் தீர்வையை வசூலிக்க மும்முரமான ஏற்பாடுகள் செய்துஜப்தி பறிமுதல் முதலிய நடவடிக்கைகளை ஆரம்பித்துவிட்டார்கள். இந்த பார்டோலி தாலூகாதான் முதன் முதல் மகாத்மா காந்தியால் பொதுசட்டமறுப்புக்கு தயார்செய்யப்பட்ட இடம்; நர் அதிஷ்டவசமாக சௌரிசௌரா சம்பவம் நேரிட மகாத்மா அஹிம்சா தர்மத்திற்கு இடையூறு நேரிட்டதைக்கருதி அவ்வியக்கத்தை மேல் நடத்தாது நிறுத்திவிட்டார். அது விஷயத்தில் பார்டோலி வாசிகள் மிகுந்த ஏமாற்றமும் துயரமுமடைந்தார்கள். அது முதல் தங்கள் சக்தியை வெளிக்காட்டிக்கொள்ள எப்பொழுது சமயம் வாய்க்கப்போகிறதென்று எதிர்பார்த்துக்கொண்டேயிருந்தார்கள். அவர்கள் இச்சமயத்தை கைநழுவ விடுவார்களா? மகாத்மா அவர்களின் நேர் மேற்பார்வையில் அஹிம்ஸா தர்மத்திற்கு தயார்செய்யப்பட்டவர்களல்லவா? இப்பொழுதும் மகாத்மாவின் உத்தம சிஷ்யரான ஸ்ரீமான் வல்லபாய் படேல் அவர்கள் ஆமதாபாத் முனிசிபல் சேர்மென் பதவியை ராஜிநாமா செய்துவிட்டு இவ்வியக்கத்தை மகாத்மாவின் ஆணையின் கீழ் தலைமை வகித்து நடத்த முன்வந்து விட்டார். அவருடைய தலைமையின் கீழ்பல ஜாதியினர்களும் இ



## ஸ்ரீமான் K.S.S. அய்யர் அவர்களின் பேராதரவு.

சென்னை சட்டநிரூபண சபையில் தஞ்சை ஜில்லாவின் உண்மைப்பிரதிநிதியாக விளங்கும் பரம்பரை பிரபுகுல திலகரான குன்னியூர் ஸ்ரீமான் K.S. சிவசுப்பிரமணிய ஐயர் M. L. C. அவர்கள் நமது "கிராமானுகூலன்" பத்திரிகையை ஆதரிக்க முன்வந்து ரூ. 100 (நூறு) நன்கொடை அளித்துள்ளார்கள். காருண்யமனதுடைய நமது ஐயர் அவர்கள் தாமாகவே பெருந்தன்மையுடன் அளித்துள்ள பெருங்கொடையை மனப்பூர்வமான வந்தனத்துடன் ஏற்றுக்கொள்ளுகிறோம்.

ஸ்ரீமான் ஐயர் அவர்கள் பொதுஜன விஷயத்திலும் காங்கிரஸ் விஷயத்திலும் ஊக்கத்துடனும் விடாமுயற்சியுடனும் பாடுபட்டு வருகின்றார் அன்னாருக்கு தீர்க்காயுளையும் திடசரீரத்தையும் சகல சம்பத்தையும் கொடுத்தருளவேணுமாய் சர்வவல்லமையுள்ள கடவுளை பிரார்த்திக்கிறோம்.

தாலூகா வாசிகள் ஒற்றுமையுடன் அஹிம்ஸா தர்மக்கொள்கையினின்று சிறிதும்பிறழாமல் விசேஷ தியாகங்கள் செய்யப் புறப்பட்டு விட்டனர். ஸ்திரீகள் கூடபின்வாங்கவில்லை. கவர்ன்மெண்டார் அடக்கு முறைகளை கையாள ஆரம்பித்து விட்டார்கள். தலைவர்களை சிறைக்கனுப்பிக் கொண்டு வருகிறார்கள் மாடுகளை ஜப்தி செய்துகொண்டு வருகிறார்கள். ஜப்திசெய்த சாமான்களை கொண்டுபோவதற்கு ஒருவரும் உதவிபுரிவதில்லை முஸ்லீம் ஒருவருடைய சொத்தை பறிமுதல் செய்துவிட்டார்கள். இதை அந்த முஸ்லீம் கனவான் ஒரு விசேஷ சம்பவமாக பாவித்து எல்லோரையும் அழைத்து ஓர் விருந்து நடத்தினாராம். என்னே! சொத்தை இழந்தவர் ஆனந்தமனுபவிப்பது இதுவன்றோ உத்தம தியாகபுத்தி. இந்த இடத்திலதான் அஹிம்ஸா தர்மத்தை வெல்ல முடியும். கிராமவாசிகள் என்ன தியாகம் செய்ய நேரிட்டாலும் சரியே வரிசெலுத்தப்போவதில்லையென்றும் எவ்வளவு கஷ்டத்திற்குள் ளாக்கப்பட்ட போதிலும் சரியே அஹிம்சா தர்மக்கொள்கையினின்றும் விலகப்போவதில்லையென்றும் நிரூபணம் செய்துகொண்டு வருகிறார்கள். இந்தியாவுக்கே இது ஓர் பரீக்ஷையாகும். இதில் கட்டாயம் அவர்கள் வெற்றிபெற்றே தீருவார்கள். கவர்ன்மெண்டார் ஏற்கனவே செய்ராவில் தோல்வியடைந்ததுபோல் தோல்வியடைந்தே தீருவார்கள். ஆனால் முன் யோஜனையுடன் நடந்துகொண்டால் அதிருப்தி பெருக இடமில்லாமலிருக்கும் அதைச்செய்வார்களா?

### மன்னார்குடி ரதோத்ஸவம்.

மன்னார்குடி ஸ்ரீ ராஜகோபாலஸ்வாமி பிரம்மோத்ஸவம் இவ்வருஷம் மானேஜிங் டிரஸ்டி ஸ்ரீமான் K. S. சிவசுப்பிரமணியய்யர் M L C அவர்கள் மானேஜ்மெண்டில் மிகவும் சிறப்பாக நடந்தேறியது ரதோத்ஸவத்தையும் சேர்ந்தாற்போல் நடத்திவிட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தும் அதிகாரிகளுடைய தலையீட்டினால் சிறிது தவக்கப்பட்டுவிட்டது. பிறகு தாக்குத்குடியிலிருந்து தேருக்கு (Spare) அச்சு வரவழைத்து வைத்துக்கொண்டு தேர்வடம் பிடிக்க ஏற்பாடு செய்தவுடன் டிவிஷனல் ஆபீஸரும் சப் மாஜிஸ்டிரேட்டும் P. W. D சப் டிவிஷனல் ஆபீஸருடையசர்ட்டிபிகேட் போதாதென்றும் அவசியம் டிஸ்டிரிக்டு இன்ஜினியருடைய சர்ட்டிபிகேட் தேவை யென்றும், தேர் வடம் பிடிக்கக்கூடாதென்றும் அதிகார தோரணையில் தடை உத்தரவு பிறப்பித்து விட்டார்கள். இப்படி தடைசெய்ய அவர்களுக்கு சட்டப்படி அதிகாரம் இருப்பதாகவும் அதற்கு தக்க காரணம் இருந்ததாகவும் தெரியவில்லை. ஆனாலும் ஸ்ரீமான் ஐயரவர்கள் உடனேமானேஜரை அனுப்பி எக்ஸிகூட்டிவ் இஞ்சினியரிடமிருந்து சர்ட்டிபிகேட் வரவழைத்துக்கொண்டு தேரைவடம் பிடிக்க ஏற்பாடு செய்து விட்டார்கள். இரண்டே நாள் சாவகாசத்திற்குள் ஆள்கள் சேகரிக்கவேண்டியிருந்தமையால் ஸ்ரீமான் ஐயரவர்கள்

"மெய்வருத்தம்பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்--கருமமே கண்ணாயினார்" என்றபடி இராத்தூக்கமும் காலத்தில் சாப்பாடும் இல்லாது அலைந்து இரண்டே நாளில் ஆள்களைசேர்த்து ஒன்பதாம் நாளில் தேரை நிலையில் கொண்டுவந்து சேர்த்தார்கள். ஸ்ரீமான் ஐயரவர்களின் விடாமுயற்சியையும் ஊக்கத்தையும், பொது விஷயத்தில மிகுந்த தர்ம சிந்தையுடன் தேகசிரமம் பாராது பட்டபாட்டையும் கண்டு பொது ஜனங்கள் பாராட்டி போற்றியதை நாம் வர்ணிக்க முடியவில்லை. தாலிப்லா விட்டால் மன்னார்குடியில் ஒரு காரியமும் நடைபெறாதென்றெண்ணியிருந்தவர்களும் அந்த எண்ணத்தை இனி கைவிட்டு விடுவார்களென்று நம்புகிறோம்.

### மன்னார்குடி தாலூகா
### கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கம்.

இச்சங்கத்தின் மீட்டிங் 11—5—28ல் மன்னார்குடியில் வைஸ்பிரஸிடெண்டு ஸ்ரீமான் கோபாலகிருஷ்ணய்யர் அக்கிராஸனத்தின்கீழ் கூடியது அநேக மெம்பர்களும் ஸ்ரீமான் N. ஆபத்ஸகாய அய்யரும் விஜயம் செய்திருந்தார்கள். பாலக்குறிச்சி கிராமமுன்சிப் ஸ்ரீமான் P.R. கல்யாணசுந்தரம் பிள்ளை சங்கத்தின் பிரசிடெண்டாகவும் பழயனூர் கர்ணம் ஸ்ரீமான் கோபாலகிருஷ்ணய்யர் வைஸ்பிரஸிடெண்டாகவும், அன்னவாசல் கர்ணம் ஸ்ரீமான் G. கிருஷ்ணசாமியய்யரும், சித்திரையூர் கர்ணம் ஸ்ரீமான் G சுந்தரராமய்யரும் செக்ரிடரிகளாகவும் தேர்தெடுக்கப்பட்டார்கள், மேற்சு ஒன்று 3 பேர் விதம் நிர்வாக கமிட்டிக்கு சேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஜமாபந்திபடி கொடுத்துவந்ததை நிறுத்தியிருப்பதை மறுபடியும் கொடுக்கும்படி செய்யவேண்டுமென்றும், சர்வே கற்கள் சுற்றிப்பார்ப்பதை முன்னிருந்ததுபோல் மூன்றுவருஷத்திற்குள் ஜாடா கற்களைப்பார்க்கவேண்டியதென்று மாற்றவேண்டுமென்றும் கறணங்களிடம் ஜூன்மீ 1ல முதல் 2 வெட்டிகளைவிட்டுவைக்கவேண்டுமென்றும், சர்குலர்களிலும் உத்தரவுகளிலும், "சிக்ஷை விதிக்கப்படும்" என்ற பதத்தை உபயோகிப்பது விரும்பத்தக்கதாயில்லையென்றும் கவர்ன்மெண்டு ஜி. ஓ. வில் மரியாதையான பதங்களை உபயோகப்படுத்த வேண்டுமென்று சொல்லியிருப்பதற்கு விரோதமாயிருக்கிறதென்றும் அதற்குபதிலாக நல்லபதங்களை உபயோகிக்கவேண்டுமென்றும் மெம்பர்கள் வருஷம் 1-க்கு ஒரு ரூபாய் சந்தா செலுத்தவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

ஸ்ரீராஜகோபாலஸ்வாமி முதல் திருநாள் மண்டகப்படியை தாலூகா மண்டகப்படியாக நடத்துவதென்றும் அதற்காக தனிபண்டு ஏற்படுத்தி அதை சங்கத்தின்பேரால் கோவாபரேட்டிவ் அர்பன் பாங்கில் தனிக்கணக்கில் போட்டு காரியதரிசி G. கிருஷ்ணசாமியய்யர் பேரால் வரவுசெலவு செய்து வரவேண்டியதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கத்திற்காக உண்மையாக உழைத்து வருகிற மகா-ா-ா-ஸ்ரீ N. ஆபத்சகாய அய்யர் அவர்களால் நடத்தப்படும் "கிராமானுகூலன்" பத்திரிகையை கிராமஉத்தியோகஸ்தர்கள் யாவரும் சந்தாதாரராக சேர்ந்து ஆதரிக்கும்படி தீர்மானிக்கப்பட்டது.

### கும்பகோணம் தாலூகா
### கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கம்.

இச்சங்கத்தின் மீட்டிங் 29-4-28ல் ஆடுதுறையில் பிரசிடெண்டு ஸ்ரீமான் T S. துரைசாமி பிள்ளை அவர்கள் அக்கிராஸனத்தின் கீழ் நடந்தது அநேக மெம்பர்களும் ஸ்ரீமான் N. ஆபத்ஸகாய ஐயரும் விஜயம் செய்திருந்தார்கள். ஜமாபந்திக்கு வரும் கிராம உத்தியோகஸ்தர்கள் கணக்கு மூட்டைகளை பந்தோபஸ்தாய் வைத்துக்கொள்ள தாலூகாக் கச்சேரியில் ஒருரூம் கொடுக்கவேண்டுமென்றும் ஸ்டேஷனரி பேபர்வகைரா சரிவர சப்ளை செய்யப்படாததால் வழக்கம்போல் சரிவர எல்லா வட்டத்திற்கும் சப்ளைசெய்யும்படி உத்தரவுசெய்யவேணுமாய் கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

ஷை சங்கத்தின் தீர்மானப்படி 22-4-28ல் ஷை சங்கத்தின் பிரசிடெண்டு ஸ்ரீமான் T. S. துரைசாமி பிள்ளை, செக்ரிடரி ஸ்ரீமான் T. S. சொக்கப்ப முதலியார், அரூர் கர்ணம் ஸ்ரீமான் கோபால சாஸ்திரிகள், சிக்கநாயக்கன்பேட்டை கறணம் ஸ்ரீமான் S. ரெங்கநாத ராவ் இவர்கள், கும்பகோணம் டிவிஷனல் ஆபீஸர் அவர்களை பேட்டிகண்டு தங்கள் குறைகளை தெரிவித்துக்கொண்டார்கள். ஸ்ரீமான் கோபால சாஸ்திரிகள் ஜமாபந்திக்காக கறணங்கள் அதிக நாள் ஹெட்குவார்ட்டரில் தங்காமல் இருக்கும்படி செய்யவேண்டுமென்றும், தங்களுக்கு கொடுத்து வந்த ஜமாபந்தி அலவன்ஸை நிறுத்தி விட்டது அநீதமென்றும், அதை மறுபடி கொடுக்கும்படி சிபார்சுசெய்ய வேணுமாயும், தாலூகாவில் தணிக்கை குமாஸ்தாவும், தாசில்தார் அவர்களும் இதுவரையில் கையெழுத்துபோட்டு வந்திருக்க இப்பொழுது ஹெட் அக்கவுண்டெண்டு கையெழுத்தும் வாங்கவேண்டுமென்று சொல்வது அதிகப்படியாயும் அனாவசியமாயும் இருப்பதுடன் காலதாமதத்தையும் தொந்தரவையும் கொடுக்கிறதென்றும் அந்த வழக்கத்தை நிறுத்தவேண்டுமென்றும் ஜமாபந்தி குறிப்பிட்ட தேதிக்கு 20 நாள் முந்தியே தாலூகாவுக்கு வரும்படிசெய்வது கஷ்டமாயிருக்கிறதென்றும் அதனாலேயே இன்னம் ஜமாபந்திக்கு அதிக நாள் இருக்கிறதென்று தாமதப்படுத்த நேரிடுகிறதென்றும் இன்னம் பல குறைகளையும் தெரிவித்துக்கொண்டதற்கு துரையவர்கள் பொறுமையுடன் யாவற்றையும் கேட்டுக்கொண்டு தகுந்த பரிகாரங்கள் செய்வதாயும் குறைகளை நிவர்த்திப்பதாயும் அன்புடன் வாக்களித்தார்கள்.



# கிராமப் பஞ்சாயத்துகள்.

## சில முக்கியமான குறிப்புகள்.

[நன்னிலம் தாலூகா போர்டு வைஸ்-பிரஸிடெண்டு ஸ்ரீமான் M. R. சாம்பசிவ ஐயர், B.A.]

x

[66-வது பக்கத்தின் தொடர்ச்சி]

### மற்ற பொது ஊழியர்கள்.

இது விஷயம் R.C.S. Dis. No 348 of 13th July 25-ல் நன்றாய் விவரிக்கப்பட்டிருக்கிறது. அதை ஒவ்வொரு பஞ்சாயத்தும் நன்றாக படித்து அதிலுள்ள விஷயங்களை ஒவ்வொரு பஞ்சாயத்தும் அமுலுக்கு கொண்டுவந்தால், நமது கிராமங்கள் புராதன நிலைமை அடைந்து கிராம பஞ்சாயத்து ஏற்பட்டதின் பலனை ருஜுப்படுத்தினதாகும்.

இது ஸம்பந்தமாய் பஞ்சாயத்துகள் கவனிக்க வேண்டிய விஷயம் மற்றொன்றுண்டு பஞ்சாயத்து ஆக்ட், ஸெக்ஷன் கிளாஸ்படி ஒவ்வொருபஞ்சாயத்தும் பவுண்டுகள் வைத்து பரிபாலிக்கலாமென்று அநுமதிகொடுக்கப்பட்டிருக்கிறது ஆனால் ஸர்க்கார் தம்மிடம் இருக்கும் பவுண்டுகளை தற்காலம் பஞ்சாயத்துகள் வசம் விடுவதில்லையென்று அபிப்பிராயப்பட்டிருப்பதோடு, பஞ்சாயத்துகள் பவுண்டுவைக்க வேண்டுமென்றால், டிஸ்டிரிக்ட் மாஜிஸ்திரேட்டினுடைய அனுமதியின்பேரில் தான் செய்ய வேண்டுமென்று விதியும் ஏற்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பஞ்சாயத்தும், தங்கள் கிராமத்தில் அழிகாலினால் ஏற்படும் சேதாரம் தங்கள் கிராமத்திற்கே சேரும்படி ஒருபவுண்டு, ஜில்லா மாஜிஸ்திரேட்டின் உத்தரவின்பேரில் ஏற்படுத்துவதோடு, ஸர்க்காரில் இந்த 2 விதிகளையும் விலக்கி பஞ்சாயத்து எல்லைக்குள் இருக்கும் பவுண்டுகளை பஞ்சாயத்துக்களிடம் ஒப்புவிக்க வேண்டுமென்றும், இல்லாத இடங்களில் பவுண்டு ஏற்படுத்த பஞ்சாயத்திற்கே அதிகாரம் பூராவும் ஏற்படவேண்டுமென்றும் மன்றாட வேண்டும்.

### ஒரு ஆரம்பப் பள்ளிக்கூடம்.

இந்நாளில் மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும், கொஞ்சமாவது எழுதப்படிக்கத் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமென்பது யாவராலும் ஆக்ஷேபிக்கப்படாத விஷயம். நமது தேசத்தில், எழுதப்படிக்க தெரியாதவர்கள் ஜாஸ்தி இருக்கிறார்கள். அதனால் உங்களுக்கு ஸ்வராஜ்யம் கொடுப்பது தகாது என்று அரசாங்கத்தார் சொல்லிக்கொண்டு நமக்கு எள்ளளவு அதிகாரமில்லாமல் வைத்திருப்பதற்கு இதுதான் காரணமென்று அயல் தேசத்தார் மெச்ச நமது அரசாங்கத்தார் சொல்லித்திரிகிறார்கள் இந்த அபவாதத்தை நீக்கி ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு சிறுவனுக்கும் எழுதப்படிக்கத்தெரியும்படி செய்ய வேண்டியது பஞ்சாயத்தின் கடமையாகும். தாலூகா போர்ட்களுக்கு நமதுவரியோடு ஒரு சிறு தொகையை வசூல் செய்துகொடுத்து, நமது சுமக்கமுடியாதவரிப்பணத்தில் ஒரு சில்லரைவீதம் ஒன்று கொடுத்தும், தானாக உபாத்தியாயர்களோ, மற்றவர்களோ ஏற்படுத்தும் கலா சாலைகளுக்கு ஒரு ஸ்வல்ப தொகை கிராண்டு என்று கொடுத்து, படிப்பின்மை ஒழிய வேண்டுமென்று, ஸர்க்கார் மனப்பால் குடிப்பது ஸாத்தியமில்லாத காரியம். டீச்சர் மானேஜர்களுக்கு கொடுக்கும் சிறுதொகையில் அவர்கள் காலக்ஷேபம் செய்வது ஸாத்தியமில்லை. இலவச கல்வி நிறைந்த இந்நாளில் சம்பளமில்லாமல் ஏற்பட்டிருக்கும் போர்டு ஸ்கூல்களைப் பார்த்துக்கொண்டு இவர்களுக்கு மாணாக்கர்களிடம் சம்பளம் கிடைப்பதில்லை ஆகையால் நூற்றுக்கு 99 உதவிபெறும் பாடசாலைகளில் ஒழிந்த வேளைகளில் பள்ளிக்கூடம் நடத்துகின்றார்களே ஒழிய அவைகளில் படி

க்கும் மாணாக்கர்கள் பெரும்பாலும், பள்ளிபோவது நின்றதும், எழுத்து வாசனையில்லாதவர்களாகிறார்கள் இப்பள்ளிக்கூடங்கள் ஸரிவர நடக்கிறதா என்று மேம்பார்வையிட தாலூகாவுக்கு ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் இந்த தாலூகா போர்டில் உதவி பெறும் பாடசாலைகளும் பஞ்சாயத்துப்பள்ளிக்கூடங்களும் 210 இருக்கின்றன. மொத்தம் ஸ்கூல்நடக்கும் தினங்கள் 200-க்குள்பட்டிருக்கும் இவர் வருஷத்திற்கு ஒருமுறை கலாசாலை தர்சனம் பண்ணுவது சிரமஸாத்தியமாயிருக்கும். ஆகையால் மேம்பார்வையால் உதவிபெறும் பாடசாலைகள் திருந்தப்போவதுமில்லை. அந்த உபாத்தியாயர்களுக்கு வருமானத்தை உயர்த்தி, பக்கத்திலுள்ளோர் கவனிப்பும் மேம்பார்வையும் ஏற்பட்டாலொழிய அந்த பள்ளிக்கூடங்கள் ஏற்பட்ட காரியங்களைச் சரிவர நடத்த முடியாத நிலைமையில் தானிருக்கும். G O 1424 of 8th October 1923 பஞ்சாயத்துகள் இவ்வித பள்ளிகளை மேம்பார்க்க அனுமதிக்கிறது. அதை எயிடட்ஸ்கூல் இருக்கும் கிராமங்களிலுள்ள ஒவ்வொரு பஞ்சாயத்தும் அமுலுக்குக் கொண்டுவரவேண்டும் உபாத்தியாருக்கு காலக்ஷேபத்திற்குத் தகுதியாய் வருமானம் உண்டுபண்ணிக் கொடுக்கவேண்டும் 'Vide. R. C. S. R. Dis No. 330 படி தாலூகா போர்டுகள் அவர்கள் பள்ளிக்கூட மேம்பார்வையும் பஞ்சாயத்துகளுக்குக்கொடுக்கலாம் அந்த அதிகாரத்தையும், தாலூகா போர்டு ஸ்கூல்கள் இருக்கும் கிராமத்திலுள்ள பஞ்சாயத்துகள் பெற்று உதவிபெறும் பாடசாலைக்கும் போர்டு பாடசாலைக்கும் சரிவர நடைபெறும்படிக்கும், இந்த பள்ளிகள் எதற்காக ஏற்பட்டு, பொதுமக்கள் பணம்செலவழிக்கப்படுகின்றவோ அக்காரியங்கள் நடைபெறுகின்றனவா என்று கவனித்து. தவறுகளை அந்தந்த அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தவேண்டும். இந்த 2 விதமான பள்ளிகள் இல்லாத இடங்களில் ஸர்க்காரில் பஞ்சாயத்துகள் தங்கள் எல்லைக்குள் பள்ளிகூடங்கள் வைத்து நடத்தினால் ஒரு உபாத்தியாயருக்கு வருஷத்திற்கு 180 ரூ. கிராண்டும் பள்ளி ஏற்படுங்கால், தளவாட ஸாமான்களுக்காக ரூ. 80 கொடுத்துதவுகிறார்கள் பஞ்சாயத்துகள் செய்யவேண்டியதென்னவென்றால் உபாத்தியாயர் சம்பளத்திற்காகவும் இதரபள்ளிக்கூடச்செலவுகளினாலும் ஆகக்கூடிய தொகைகளில் கிராண்டு ரூ 180 போக பாக்கித் தொகையை பஞ்சாயத்து நிதியிலிருந்து செலவழிக்க ஒப்புக்கொள்ளவேண்டும். கிராமத்தில் எல்லா வகுப்பாரும் வரக்கூடிய பொதுஇடத்தில் பஞ்சாயத்து செலவில் ஒரு கட்டடம் கட்டிக்கொடுப்பதாகவோ அல்லது பஞ்சாயத்து செலவில் வாடகைக்கு அமர்த்திவைப்பதாகவோ ஒப்புக்கொள்ளவேண்டும். பஞ்சாயத்தில் உபாத்தியாயரை நியமித்து அவர் ஸரிவர பள்ளியை நடத்தி வருகிறாரா என்று அடிக்கடி கவனித்து, கிராமத்திலுள்ள படிக்கக்கூடிய ஒவ்வொரு சிறுவனும் பள்ளியில் சேரும்படி தூண்டி பள்ளியில் சேர்க்கவேண்டும் பஞ்சாயத்து பாடசாலைகள் மற்றவைகளை விட நன்றாக நடக்கக்கூடிய எல்லா ஸவுகரியங்களுமிருக்கின்றன. ஸ்தலத்திலேயே கவனிக்கலாம். கிராமவாஸிகளுடைய மதாசாரங்களுக்குத் தக்கபடி விடுமுறைகள் முதலியன விடலாம். குழந்தைகளின் பெற்றோர்களிலேயே சிலர் கவனிப்பவர்களாகவும் இருக்கக்கூடியதை முன்னிட்டு ஸ்கூல் செவ்வனே நடப்பதில் ரொம்ப தொகை உள்ளவர்களுடைய ஆதிக்கத்தில் நடப்பதால், இப்பள்ளிகள் சிறுவர்களுக்கு பயன் கொடுத்தே தீருமென்பதை ஊகிக்கலாம். ஆகையால் ஆரம்ப பாடசாலையில்லாத ஒவ்வொரு பஞ்சாயத்தும் ஒரு பஞ்சாயத்து ஸ்கூல் ஏற்படுத்திக்கொண்டு கிராமத்திலுள்ள ஒவ்வொரு சிறுவனும் பள்ளிக்கூடத்திற்குப்போகும்படி செய்யவேண்டுவது பஞ்சாயத்துகளின் கடமைகளில் ஒன்றாகும்.

## வாசகசாலையும், பொது இடமும்.

கிராமவாஸிகள் அனைவரும் படிப்பில் முதிர்ச்சி அடைந்தவர்களாயிருப்பது ஸாத்தியமன்று. ஆனால் படிப்பு தெரியாதவர்களும், நமது புராணங்களையும், மேலான கிரந்தங்களையும் தற்காலத்தில் உலகத்தில் பல தேசங்களில் நடக்கும் வர்த்தமானங்களையும் படிக்கக்கேட்டாவது தங்கள் புத்தியையும் நோக்கத்தையும் விசாலப்படுத்திக்கொள்ள வேண்டும். தேச க்ஷேமத்தைக் குறித்து ஒவ்வொருவரும்



223461

அவரவர்கள் வேலை முடிந்து ஓய்வு நேரத்தில் ஓரிடத்தில் கூடி கிராம காரியங்கள் வெளி வர்த்தமானங்கள் கலந்து பேசவும். யாராவது நன்றாக படிக்கக்கூடியவர்களைக்கொண்டு தினசரி பத்திரிகைகளையோ, புண்ய கதைகள், புராணங்களையோ படிக்கச் செய்து சற்றுநேரம் கேட்பதென்றும் ஸம்பிரதாயம் கிராமங்களில் ஏற்பட்டால் கிராமங்களில் தோன்றும் கக்ஷிபேதங்கள் ரொம்பவும் ஒழியும். எல்லாரும் ஓர் இடத்தில் கூடுவதென்றால் கிராம ஊழியர்கள் முதலியோர் பஞ்சாயத்தாரிடம் தெரிவிக்க வேண்டுவனவைகளோ அவர்களிடமிருந்து கேட்டுக்கொள்ளவேண்டியவைகளோ கிராமத்தில் பலபேருக்கு தெரிவதால் எல்லோருக்கும் கிராம நிர்வாகத்தில் தனக்கும் ஸம்பந்தமுண்டென்று அன்றன்று புத்தியில் படுவதோடு, தினந்தோறும் மேல் எவ்விதம் நடத்தினால் கிராமம் முன்னேற்றமடையுமென்பதை கிராமத்தார் சிந்தனைசெய்யவும், கலந்து யோசிக்கவும். காரிய சித்திபெறவும் பிரமேயங்களுண்டு மேனாடுகளின் மாதிரி நம் நாட்டில் ஏல்ஹவுஸில் கூடுவது ஸம்பிரதாயமில்லை. மதுபானத்தின் பிறகு யோசனை பண்ணும் பழக்கமுமில்லை அநேகமாய் கிராமந்தோறும் மடங்கள் சாவடிகள் உள. அவைகளிலேயே அஸ்தமனத்திற்கு அனுஷ்டானமான பிறகு 1-மணி நேரம் மேற்சொன்ன விதம் ஸமூஹ வாழ்க்கையை விருத்தி செய்வது பொருந்தும். மடங்கள் சாவடிகள் இல்லாத கிராமங்களில் குளத்தங்கரைக்கு ஸமீபத்தில் ஒரு கட்டடம் ஏற்படுத்துவது அவசியம். அவ்விதம் ஏற்பட்டால் ஜனங்கள் அங்கு நித்ய விதிகளுக்கு வருவது அத்யாவசியமானபடியினால் அப்படியே சற்று தங்கி வாசகசாலையை உபயோகப்படுத்துவதுடன் ஏனைய கிராமத்தாருடன் கூடிக்கலந்து பேச தருணம் வாய்க்கும் பஞ்சாயத்து பாடசாலை உள்ள கிராமமாயிருந்தால் பாடசாலை அதில் வைக்கும் படிக்கும் வெளியில் கிராமத்தார் கூடிப்பேசும் படிக்கும் உள்ள வஸதிகளோடு கட்டடத்தை அமைத்து அதிலேயே வாசகசாலையும் ஏற்படுத்தலாம் பஞ்சாயத்து ஆபீஸும் அதே கட்டடத்தில் இருக்கும்படி செய்யவேண்டும். எந்த விதத்திலும் ஒருபொது இடத்தை நிர்மாணித்து அதில் ஒரு லைப்ரரி புத்தகசாலையும் வாசகசாலையும் ஏற்படுத்தல் வேண்டும். ஓர் வாசகசாலைக்கு கிராம[illegible] தனிப்பட்ட தேரா[illegible] வில் பிரமுகர்கள் வரவழைக்கும் [illegible]களை உபயோகத்திற்களிக்கும் பொருட்டு கேட்டு பெறலாம் வாசிக்கக் கூடியவர்களெல்லாம் ஆளுக்கு சில அணாக்களுக்கு மேற்படாமல் உதவி செய்து மொத்தத்தில் பத்திரிகைகள் வாசகசாலைக்கு வரவழைக்கலாம். பத்திரிகைகளைப் படித்தபின் கடிதமாய் விற்று அதே நிதியில் சேர்த்துக்கொள்ளலாம்.

புத்தக சாலைக்கு, ரொக்கமாகவோ அல்லது புத்தக ரூபமாகவோ எந்த பஞ்சாயத்தில் 200-க்கு மேற்படாமல் ஒரு தொகை உதவிசெய்யப்படுகிறதோ அந்த பஞ்சாயத்திற்கு ஸர்க்காரில் அத்தொகைக்கு சமமான ஒரு தொகைக்கு புத்தகம் நாம் கொடுக்கும் ஜாப்தாப்படி ஸப்ளை செய்கிறார்கள். இவ்விதம் கிராண்டுகளைப்பெற்று புத்தகசாலையை விருத்தி செய்வோமானால், நல்ல புத்தகங்கள் கிராமத்தில் எல்லோருக்கும் படிக்க கிடைப்பது மாத்திரமன்று. நல்லபுத்தகங்கள் எழுதுவோர்களையும் அச்சுப்போடுகிறவர்களையும் நாம் ஆதரிப்பவர்களாவோம். இது ஸுலபமாய் ஒவ்வொரு பஞ்சாயத்தும் செய்யக்கூடிய விஷயம்.

கிராம பொதுவிடை முதலிய ஸமுதாயங்களை விருத்தி செய்து ஒரு பஞ்சாயத்து ஸரிவர நடைபெற வேண்டுமானால் அதன் மூலதனத்தை விருத்தி செய்ய வேண்டியதுதான் அது முக்கியமாய் கவனிக்கவேண்டிய விஷயம். பணத்தை வைத்துக்கொண்டு தான் எக்காரியத்தையும் செய்து முடிக்க முடியும் கிராமம் தோன்றின நாளாய் கிராமப்பொது காரியங்களுக்கென்று ஏற்பட்டிருக்கும் சொத்துக்களை அபிவிருத்தி செய்து பராமரிக்காமல் அதன் வரும்படிகளை குறையவிட்டு, பொது காரியத்திற்கென்று வேறு வரி போடுவதென்பது முட்டாள்தனமாகும். கிராமபொது சொத்துகளை பரிபாலித்து அதிலிருந்து நமக்குக் கிடைக்கக்கூடிய வரும்படியை பூராவும் அடைந்து பொதுக் காரியங்களில் எதற்கென்று அச்சொத்துகள் ஏற்கனவே ஒதுக்கப்பட்டனவோ அக்காரியங்களை செய்து மிகுதியிருக்

Y31m N27912 25

கும் பணத்தை வேறு காரியங்களுக்கு செலவிட வேண்டும் கிராம பொதுவிடைகள் பலவிதமாக ஒதுக்கப்பட்டிருக்கின்றன. சில கிராமங்களில் மொத்தமாய் சில நிலங்கள் நன்செய் புன்செய் ஒதுக்கப்பட்டு அதன் வரும்படியிலிருந்து கிராம கோவில்கள், உருஷாந்திரச் செலவுகள் போக பாக்கி கிராம காரியங்களுக்கு பிரயோஜனப்படும்படி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது தவிர, பூசாரி மான்யமென்றும், வெட்டியான், தச்சன், கொல்லன், ப்ரியாரி மான்யங்களென்றும் ஒதுக்கப்பட்டு, அவரவர்கள் அனுபவித்துக்கொண்டு ஏற்பட்ட வேலையை செய்வதென்றும், களங்களில் வேறு வரும்படி அவர்கள்பெற்றுக் கொள்வதென்றும், ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. சில கிராமங்களில் தனித் தனியே ஒவ்வொரு கோவிலுக்கும் ஒவ்வொரு தொழிலாளிக்கும் மான்யங்கள் ஏற்பட்டிருக்கின்றன. எவ்விதம் ஏற்பட்டிருந்தாலும்இந்தமான்யங்களை பஞ்சாயத்து விசாரணையிலெடுத்துக்கொண்டு அவைகளுக்குமராமத்து செய்து அவைகளினின்றும், கிடைக்கக்கூடிய வரும்படிகளை அடைந்து கிராமத்திற்கு தொழிலாளிகளை நியமித்து வேலை வாங்குவதும், கோவில்களை சரிவர நடத்துவதும் கிராமச் சபையின் பொறுப்பாகும். தவிர பொதுவிடை வரும்படிகளில், கருவக்காய் குத்தகை, மாட்டு மந்தைகளில் சாணி குத்தகை, இலுப்பை முதலிய சருகு குத்தகை, பாசி குத்தகை சேர்ந்ததாகும். இவைகளை பாதுகாப்பதுடன், புறம்போக்கு ஸ்தலங்களில் பஞ்சாயத்துகள் மரங்கள் வைத்து பயிராக்கி அதன் வரும்படிகளை பஞ்சாயத்து தனத்திற்கே சேர்க்கவேண்டியது. பஞ்சாயத்துகளால் கவனிக்கப்பட வேண்டிய விஷயம். கிராமத்தில் உள்ள வரும்படிகளைக்கொண்டு பஞ்சாயத்து நிதியை விருத்திசெய்யவும் மார்க்கம் ஒவ்வொன்றாய் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

மான்யங்கள்மேல் குறிப்பிட்டபடி, மராமத்துகள் செய்து ஏற்பட்ட காரியங்களை ஸரிவர முடித்து, மிகுதியாகும் தொகையை பஞ்சாயத்து நிதியுடன் சேர்க்கலாம் உதாரணமாக பெருமாள்கோவில் மான்யமென்று சில கிராமங்களில் 3 ஏகர் 4 ஏகர் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதை அனுபவித்துக்கொண்டு பூஜைசெய்ய ஒருவரும் அர்ச்சகர் முன் வருவதில்லை. ஏனென்றால் மராமத்து இல்லாமல் சீர்கேடாய் வரும்படி அளிப்பதில்லை. அந்நிலத்தை சீர்திருத்தி அர்ச்சகருக்கு வருஷத்திற்கெவ்வளவென்று கொடுத்து, பாக்கியை கோவில் ரிபேருக்காக ஒரு நிதி சேர்க்கலாம். இதே விதம் எல்லா மான்யங்களும் சீர்பட்டால் அந்தந்த காரியங்களுக்கு சிலவானது போக பாக்கியை பஞ்சாயத்து நிதியுடன் சேர்க்கலாம்.

### கருவக்காய்.

பஞ்சாயத்து பிரஸிடெண்டு, காலத்தில் இதை குத்தகைவிட்டு பின் நடக்கும் பஞ்சாயத்து மீட்டிங்கில், குத்தகை முச்சலிக்காவை ஆஜர் செய்ய வேண்டும். இலை உதிர்காலங்களில் செத்தையும் அவ்விதமே குத்தகை விடவேண்டும். குளத்துபாசிகளை குத்தகை விட்டு கிராம தேவதை உத்ஸவங்களைச் செய்து மிகுதியாகும் பணத்தை நிதியுடன் சேர்க்கலாம் பஞ்சாயத்திற்கென்று ஸமுதாய புறம்போக்குகளை ஆதீனம்பெற்று அவைகளில் மரங்களை விருத்திசெய்து (பஞ்சாயத்து சிலவில்) அந்த வரும்படிகளை நிதியுடன் சேர்க்கவேண்டும். மேற்படி புறம்போக்குகளை ஆதீனம்பெற ஜீ. ஓ 928 எல். அண்டு எம். 9-4-27ல் செய்ய வேண்டிய காரியங்கள் விவரிக்கப்பட்டிருக்கின்றன. ஸர்க்காரில் மேற்படி ஆதீனத்தை நிபந்தனை அன்னியில் பஞ்சாயத்திற்கே கொடுத்துவிட வேண்டுமென்று வற்புறுத்த வேண்டும். இதே சம்பந்தத்தில், தாலூகா போர்டுகளுக்கு ஏற்கனவே கொடுக்கப்பட்ட ஜீ ஓ 139 G. O. Fress [Rev] of 26-1-27ல் ஸர்க்கார் ஆதிகயித்துக்கு மறுபடி எடுத்துக்கொள்ளப்பட்டதும், தாலூகா போர்ட்டாரால் மேற்கண்டவைகளிலிருந்து கிடைக்கக்கூடிய வருமானங்கள் பஞ்சாயத்திற்கே அளிக்கப்பட்டிருக்கும், பாட்டை முதலிய புறம்போக்குகள் பஞ்சாயத்திற்கே விட்டுவிடவேண்டுமென்று, வலிவுடன் ஸர்க்காருடன் மன்றாடி அந்த உரிமை அவசியம் பெறவேண்டும். அந்த உரிமைபெற்று, அவைகளில் ஏற்படும் ஆக்கிரமிப்பை தடுத்து அதை பஞ்சாயத்துகள் ஸரிவர பரிபாலிக்கவேண்டும்.

தவிர தாலூகா போர்டினால் பின் வரும் வரும்படிகள் பஞ்சாயத்துகளுக்கென்று கொடுக்கப்பட்டிருக்கின்றன.

[தொடரும்]



# பண்டைத் தமிழரின் மேம்பாடு.

[ஸ்ரீமான் ஊ. சா. வேங்கடராம ஐயர் எழுதியது]

### காப்பு

பண்டைத் தமிழரின்மேம் பாடுரைத்தற் கப்பாத
கண்டத் துதித்துக் கடல்குடித்த—தண்டமிழ்வாழ்
நாட்டாரோ டொன்றுபட்ட நன்கமர்ந்த நற்றவத்தோன்
தாட்டா மரையெனக்கோர் சார்பு.

### முன்னுரை.

உலகம் இயற்கையின் சிறப்பால் நாள்தோறும் வளர்ந்துகொண்டே போகின்றது. அங்ஙனமே அந்த உலகத்திலே தோன்றி வாழவேண்டிய மக்களும் எல்லாவற்றாலும் பெருகி வளரவேண்டியவர்களாகின்றார்கள். இம்முறையில் உலகிலே தோன்றிய மக்களாவார் ஒவ்வொருவரும் இக்காலம் தத்தம் நாட்டினருடையவும் வகுப்பினருடையவுமான பண்டை மேம்பாடுகளை ஆராய்ந்தறிவதில் விருப்பமுள்ளவர்களாயிருக்கின்றனர்.

இந்நிலையில், தமிழர்களாகிய நமக்கும் இந்நெறியிலே உழைக்கவேண்டிய கடமை இருக்கின்றது என்பது மிகையாகாது. நமது நாடோ எக்காரணங்கொண்டோ—தருந்த ஆராய்ச்சியின் பயனாகவே என்பது சரியான விடையாகும்—பாரமார்த்திக ஞானத்தையே மிகவும் மேம்பட்டதாகக் கருதியது; நிலையாமை என்ற தலைப்பிலே பல கருத்துக்களையும் பசுமரத்தாணிபோலப் படிப்போர் மனத்திலே பதியும் வண்ணம் பகர்ந்துள்ள பன்னூறு நூல்களைப் பெற்றுள்ளது; அறம், பொருள், இன்பம், வீடு என்ற நாற்பெரும் பேறுகளை மக்களாவார் எய்துதற்குரிய மார்க்கங்களை வகைப்படுத்திக் கூறிய மாண்பு நிறைந்தது; ஆன்றமைந்த அடங்கிய கொள்கையினையுடைய பல சான்றோர்களைக்கொண்டது.

இங்ஙனமாகவும் உண்மைக்கு மாறுபாடாகுமாறு நமது பண்டைப் பெருமைகளைத் திரித்துணர்த்தப் புகுந்த பல நூல்கள் இக்காலத்தில் ஆங்காங்கு வெளிவரத் தொடங்குகின்றன. அவற்றை மறுத்துரைக்க வேண்டியதை நாம் நமது கடமையாக்கொள்வதிலும், நமது பெருமைகளை உள்ளவாறு தக்க சான்றுகளுடன் ஆராய்ந்தறிந்துகொள்ள முயலுவதும், அங்ஙனமே உணரத் தூண்டுவதும் செய்வது நல்லதொரு காரியசித்திக்கான முறையாகும். அன்றியும் அது வாழ்க்கையை இனிதாக்கிக் கொள்ளத் துணைபுரிவதுடன் பகைவர்களையும் தன்வசப்படுத்தும் போராற்றலினையு முடையதாகும்.

மக்கட்பிறப்பினர் ஒவ்வொருவரும் உலகத்துள்ள எல்லா நாட்டு முழுவிவரங்களையும் அறிந்துகொள்ள முடியாவிட்டாலும்—அனைத்து நாடுகளின் விவரமான வரலாறுகளையும் தெரிந்துகொள்ள வேண்டியதுதான் முதன்மையானது—தான் பிறந்த நாட்டினையும், அதனைச்சார்ந்த நாடுகளையும் பற்றிய வரலாறுகளையேனும் தெரிந்துகொள்ள வேண்டியது மிகவும் இன்றியமையாத தொன்றாம். "முற்றும் நன்றாக ஒன்றையும், பிறவற்றில் இன்றியமையாத சிலவற்றையும் அறிந்து கொண்டவரே கற்றவர் எனப்படுவார்" என்ற கருத்துப்படத் தோன்றிய ஆங்கிலப் பழமொழியின் கருத்து இங்கே ஊன்றி நோக்கத்தக்கது. மேலும், மேம்பட விரும்பிய நாட்டினர் வேற்று நாட்டினரிடமிருந்து வந்து புகுந்து தொல்லையினைச் செய்யும் நாகரிகம் என்னும் போர்வையில் மறைந்து கிடக்கும் அநாகரிகப் பேய்களுக்கு ஆட்பட்டு விடலாகாது. உருவம், உடை முதலியவற்றை மாற்றிக்கொள்வது நாகரிகமாகாது. அவை அநாகரிகமே. எந்தச்சிறந்த கொள்கையினையும் தமது நாட்டின் பழமையான கொள்கைக்குக் கேடு சூழாதவகையில் தம்முடையதாக மாற்றிக்கொண்டு ஏற்றுக்கொள்வதுதான் நாகரிகமும், வளர்ச்சிக்குறியுமாகும். ஏனெனில் இக்காலத்துத் தோன்றும் நாகரிகப்புரட்சிகள் விரைவிலே அழிக்கப்பட்டு அநாகரிகங்களாகக் கருதப்படுகின்றன. முற்காலத்திலே நம்முடைய முன்னோர்கள் அமைத்து வைத்த முறை பிறரால் எளிதிலே அழிக்க முடியாதனவாக இருக்கின்றன. இவற்றால் இக்கட்டுரை மாறுதலே வேண்டாம்என்று வற்புறுத்தஎழுந்ததாகாது. மாறு

தல் செய்துகொள்ள நேருங்காலந்தோறும் அவையிற்றைத் தீர ஆராய்ந்து முன்னோர்காட்டிய நெறியிலே முற்றும் மாறுபட்டுக் கட்டுப்பாட்டையும், அஸ்திபாரத்தையும் அடியோடு அழித்துவிடாது அவற்றிற்கும் ஆக்கம் தேடும் வகையில் மாற்றிக்கொள்ள வேண்டும் என்பதும், கண்மூடித்தனமாகக் 'கண்டதே காட்சி - கொண்டதே கோலம்' என்று தறிதலைகளாகத் திரிதல் கூடாது என்பதுமே இதன் கருத்தாகும். நமது முன்னோர் நாகரிகத்தைக் கண்ணோட்டம் என்ற பொருளிலே கொண்டனர்: பிறர் மகிழ்வதைப் பெரிதாகக் கருதித் தமது உயிரையும் கொடுக்கத் துணிவதையே நாகரிகமாகக் கொண்டனர்.

இக்கூறிய முறையிலே நமது நாட்டார்கள் முற்றும் நன்றாகக் கற்கவேண்டியது நமது நாட்டினருடைய பண்டைப் பெருமைகளையே. அப்பெருமைகளைத் தெரிந்துகொள்வதற்கு அதன் கண் பண்டைக்காலத்தே நிலைபெற்றிருந்த கல்வி, அறிவு, ஒழுக்கம், பழக்கம், முயற்சி, செல்வம், கைத்தொழில், வாணிகம், மதக்கோட்பாடு, போர்முறை, வீரம், அரசாட்சி ஆகியவற்றை ஆராய்ந்தறிந்து கொள்வது தக்கதொரு துணையாகும். மிக்க நாகரிகம் மேம்பட்ட காலத்தன்றி இவை அனைத்தும் நன்னிலையில் அமைந்திருக்க இயலாது என்பது மேதாவிகளது கொள்கையாகும்.

இங்ஙனம், ஆராய்ந்து அறிந்துகொள்வதற்கு அவ்வக் காலங்களிலே நிகழ்ந்தசெய்திகளை உள்ளது உள்ளபடியே தம் பின் வருவோர்க்கு இனிது விளங்கும் வண்ணம் பண்டைப்பெரியோர்களாலே தொன்று தொட்டு எழுதி வைக்கப்பெற்றுள்ள பழைய நூல்களே போதிய கருவிகளாயிருக்கின்றன. இஃது எந்நாட்டினருக்கும் ஒப்ப முடிந்ததொன்றே. ஆதலின் இக்கட்டுரையும் அம்முறையிலே நமது பண்டைத் தண்டமிழ்ச் சான்றோர்களாலே அவ்வப்பொழுது எழுதிச்சேர்த்து வைக்கப்பெற்றனவும், இன்றைக்குச் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தே நிகழ்ந்த செய்திகளையும் உள்ளவாறு உணர்ந்துகொள்ளத் துணைபுரிவனவுமான சங்கச் செய்யுளுரைகளின் துணைகொண்டு தொகுக்கப்பெறுவதாகும்.

இனி, இக்கட்டுரை ஆராய்ச்சியில் வல்ல பெரியோர்களால் பெரிதும் விரித்து விளக்கிக்கூறப்பெறவேண்டியதாதலின் இடம் நோக்கிக் காலத்திற்கேற்பச் சிறிது சிறிது ஒவ்வொன்றிலும் குறித்துக் காட்டிச்செல்லும் முறையில் வரையப்படும். "குற்றங் களைந்து குறைபெய்து வாசித்தல் கற்றறிந்த மாந்தர் கடன்." இது பண்டு, தமிழர், மேம்பாடு என்ற மூன்று பெரும் பிரிவுகளையும், பல சிறு பிரிவுகளையும் உடையதாகும்.

### பண்டு என்பது யாது?

நமது தலையங்கத்தின் முதற் சொல்லாகிய பண்டு என்பது இக்கட்டுரையிலே குறிக்கப்பெறும் செய்திகள் நிகழ்ந்ததாக அறியப்படும் காலத்தை; இக்காலம் நம்மவர்க்குக் கால ஆராய்ச்சிக்குக் கருவிகளாக வுள்ளன சங்கச் செய்யுள்களுட் சில; இறையனரகப் பொருளிற் கண்ட சங்கவரலாறு; சிலப்பதிகாரம் முதலிய நூல்களிற் காணும் குறிப்புக்கள்; கல் வெட்டுகள் இவைபோன்ற பிற. இம்முறையிலே ஆராய்ந்து காலத்தைக் கணிக்கவேண்டியது நியாயமானதே. அம்முறையிலே பலர் பெச்சத்தக்க வகையிலே முயன்று வருகின்றனர். இக்கட்டுரை முற்றும் நூல்களின் துணைக்கொண்டே வரையப்படுதலின் அம்முறையிலேயே பண்டு என்பதையும் ஆராயவேண்டியது நியாயமானது இனி, மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் ஆதிகாலத்திருந்த புலவராக அறியப்படுகின்றவர்களுள் முரஞ்சியூர் முடிநாகராயர் என்ற பெரியாரும் ஒருவர். இவர் பாடியதாக எட்டுத்தொகை நூல்களுள் எட்டாவதாகிய புறநானூற்றிலே இரண்டாவது பாடலாக ஒன்று அமைந்துள்ளது. புறநானூற்றுப் பாடல்களின் வைப்பு முறையும் ஒரு வகையில் காலவரிசையிலேயே அமைக்கப்பட்டுள்ளதோ எனக் கருதுகின்றவர்களும் உண்டு. அப்பாடலில் அவர் பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் என்னும் சேரநாட்டரசனை முன்னிலைப்படுத்திப் பாடுகிறார். அன்றியும், அப்பாடலில் அச்சேரலனைப் 'பாண்டவர் ஐவருடனே துரியோதனன் முதலான நூற்றுவரும் சண்டைசெய்து அழியும் வரையில் அப்போரிலே உள்ள இருதிறப் படைகளுக்கும் பெருஞ் சோறாகிய மிகுந்த உணவைக் குறைவின்றிக் கொடுத்தவனே' என்றும் சிறப்பித்துக் கூறுகிறார். இச்சண்டை பாரதப்போரைக் குறிப்பது என்பது உலகமறிந்த உண்மையாகும் பாரதப் போர் நிகழ்ந்தகாலம் இன்றைக்கு ஐயாயிரத்து இருபத்தேழு ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பது நமது பண்டைப் புராண இதிகாசங்களாற் கண்ட உண்மை. இதனை மறுத்துக்கூறும் சிலரும் சற்றேறக்குறைய மூவாயிரத்துச் சில்லறை யாண்டுகளுக்கு முற்பட்டது என ஒத்துக்கொள்கின்றனர்(தொ-ம்)



# நஞ்சை நிலங்களின் ஜல உரிமைகள்.

## கலெக்டரின் அநீத உத்தரவு.

### சாகுபடிசெய்ய அனுமதியா?

ரயத்துகளின் "பாத்தியதைகளுக்குப் பெரிய ஹானி"

### ஜில்லா சங்கக்கமிட்டியாரின் அறிக்கை.

திருநெல்வேலி ஜில்லாவில் நன்செய் நிலங்களின் உரிமை விஷயமாக ஒரு முக்கியமான பிரச்னை எழுப்பப்பட்டு ஜனங்களுக்கு பெரிய ஆத்திரத்தை உண்டுபண்ணியிருக்கிறது. சமீபத்தில் இந்த ஜில்லாவின் கலெக்டரும், அவருக்குக் கீழ் உள்ள சப் கலெக்டர்களும் நன்செய் நிலங்களின் ஜல உரிமைகள் விஷயமாக உத்திரவொன்றை வெளியிட்டார்கள். அதின் சாராம்சமாவது:—(1) இந்த ஜில்லாவில் கார் பயிர் காலத்தில் பிசானம் பயிர் காலத்தை விட ஜல சப்ளை குறைவாதலால், நஞ்சை நிலங்கள் ஒருபோக நிலங்களென்றும், இருபோக நிலங்களென்றும் பிரிக்கப்பட்டு பிசானத்தைவிட கார்காலத்தில் நன்செய்ப்பயிர் குறைந்திருக்க வேண்டுமென்று ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. (2) ஒருபோக நன்செய் சொந்தக்காரர்கள் பிசான பயிர்காலத்தில்தான் தங்களுக்கு சட்டப்படி உரிமையுள்ள ஒரு பயிர் ஜலத்தை உபயோகப்படுத்தவேண்டும். (3) சமீபகாலத்தில் அவர்கள் அப்படிச் செய்யாமல் கார் பயிர் காலத்தில் தாங்களும் சாகுபடிசெய்து கொண்டு, பிசானம் காலத்தில் இரண்டாவது அல்லது 'பசலி ஜாஸ்தி' பயிர் செய்கிறார்கள். இதனால் கார் பயிர் காலத்தில் இருபோக நன்செய்களுக்கு ஜலசப்ளை திருப்திகரமாயில்லாமலும், அவ்வித நிலங்களின் விளைச்சலும் காளடைவில் குறைந்துகொண்டிருக்கிறது. (4) ஆகையால் ஒருபோக நன்செய் சொந்தக்காரர்கள் காரில் ஒரு பயிரும், பிசானத்தில் 'பசலி ஜாஸ்தி' பயிரும் சாகுபடி செய்ய வேண்டுமென்று நினைத்தால் 'கார்' காலத்தில் பயிர் செய்ய ரெவினியூ அதிகாரிகளிடமிருந்து அநுமதி பெற்றுக்கொள்ளவேண்டும். அப்படிசெய்யத் தவறினால் அவர்கள் 'பிசான' காலத்தில் ஜலம் போதுமானபடி இருந்தபோதிலும் சாகுபடி செய்ய அநுமதிக்கப்படமாட்டார்கள். மீறி சாகுபடி செய்பவர்களிடம் தண்டத் தீர்வை வசூல் செய்யப்படும்.

இந்த உத்தரவினால் இந்த ஜில்லாவிலுள்ள ஏராளமான ஒருபோக நன்செய் சொந்தக்காரர்களுக்கு பரபரப்பு உண்டாயிருக்கிறது. அவர்களில் அநேகர் திருநெல்வேலி ஜில்லா சங்கத்தாரிடம் இந்த விஷயமாய் கிளர்ச்சியேற்படுத்த வேண்டுமென்று வேண்டிக்கொள்ள மேற்படி சங்கத்தார் கலெக்டருடைய உத்திரவைப் பரிசீலனைசெய்து ரிபோர்ட்டு செய்ய ஒரு கமிட்டியாரை நியமித்தார்கள். அக்கமிட்டியார் இந்த முக்கியமான பிரச்னையின் பல அம்சங்களையும் கவனித்து நீண்டதோர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள். அது மிகவும் முக்கியமான விஷயங்களைப்பற்றிக் குறிப்பதால் அதன் சாராம்சத்தை இங்கே சுருக்கமாய் குறிப்பிடுகிறேன். திருநெல்வேலி கலெக்டரின் உத்தரவு சில அடிப்படையான எண்ணங்களின்மேல் உண்டாயிருக்கிறது. ஒருபோக நன்செய் நிலங்களுக்கு ஒரு பயிருக்குத்தான் ஜலவுரிமையுண்டென்றும், இருபோக நன்செய் நிலங்களுக்கு இரண்டு பயிர்களுக்கு ஜலவுரிமையுண்டென்றும் கலெக்டர் நினைக்கிறார். இந்த ஆரம்ப அபிப்ராயம் தவறு. அந்த சொற்றொடர்களின் தாத்பரியம் அநுபோகத்தில் அப்படியல்ல, நிலசாகுபடி நிலத்தீர்வை சம்பந்தமாக பல புஸ்தகங்

களையும், ரிபோர்ட்டுகளையும் ஆராய்ச்சிசெய்ததில் இந்த ஜில்லாவிலும், இந்த ராஜதானியில் பல பாகங்களிலும் ஒரே அனுஷ்டானம்தான் இருந்து வந்தது. புஞ்செய்க்கு, பசலிக்கு இவ்வளவென்ற மொத்தத் தீர்வையும், நஞ்செய்க்கு பசலிக்கு இவ்வளவென்ற மொத்தத்தீர்வையும், நஞ்செய்க்கு அந்தந்த பயிரின் விளைவில் ஒருபாகமும் வெகு காலமாக வசூலிக்கப்பட்டு வந்தது. நிலங்கள் பாகுபாடு செய்யப்படுவதில் ஒருபோக நஞ்சை இருபோக நஞ்சையென்று இல்லை. பின்னால் சர்க்கார் நஞ்சைக்கும், விளைவில் தங்களுடைய பாகத்தைப் பணமாக வாங்கவேண்டுமென்று நினைத்தபோதுதான், இந்த சொற்றொடர்கள் ஆக்கப்பட்டன அப்போது நிலச்சுவான்களிடம், இரண்டு பயிர்களுக்கும் மொத்தமாக பசலிக்கிவ்வளவென்று தீர்வையை நிர்ணயப் படுத்துவதாக சர்க்கார் சொன்னார்கள். இதை சிலர் ஒப்புக்கொண்டார்கள். அநேகர் ஒப்புக்கொள்ளவில்லை அப்படி ஒப்புக்கொண்டு தீர்வையை வருஷத்திற்கு மொத்தமாகக் கொடுக்க சம்மதித்தவர்கள் நிலங்கள் இருபோக நஞ்சையென்று சொல்லப்பட்டது. அநேகர் முதல் பயிருக்குத் தீர்வையும், பின்னால் இரண்டாம் பயிர் செய்தால் அதற்குண்டான தீர்வையும் கொடுப்பதாகச் சொல்லி சர்க்கார் யோசனையை ஒப்புக்கொள்ளவில்லை. இவர்களுடைய நிலம் ஒருபோக நிலமென்று சொல்லப்படுகிறது. இதனால் இந்த இரண்டு தரமாக நிலத்தைப் பதிவு செய்துகொண்ட நிலசுவான்களுக்கும், விவசாயத்திற்கு ஜலம் எடுக்க பாசனத்தில் ஜலமிருக்கும் வரை சம உரிமையிருக்கிறதென்று நன்றாய் புலப்படுகிறது. இரண்டு பயிர்களுக்கும் சேர்த்து கண்டிராக்டாக தீர்வையைக் கொடுக்க ஒப்புக்கொள்ளாததினால் மாத்திரம் அந்த நிலசுவான்களின் உரிமைகள் போய்விடாது. அப்படி ஒப்புக்கொண்ட நிலசுவான்களுக்கு அதனால் மாத்திரம் புதிய உரிமைகள் மற்ற நிலசுவான்களுக்கில்லாமல் வந்துவிடாது. அப்படியிருக்குமானால் போர்டு ஸ்டாண்டிங் ஆர்டரில் 6, 5 (ஏ) யில் எந்த ரயத்தும் எப்போது வந்தாலும் அவனுடைய நஞ்சைக்குத் தீர்வையை இருபோகத்திற்கு ஒருவிதமாய்ச் சேர்த்து வாங்க ரெவினியூ அதிகாரிகளுக்குக் கொடுக்கப்படும் அதிகாரத்திற்கு அர்த்தமில்லை. சில நஞ்சைகளில் மூன்று போகங்கள் பயிரிடப்படுகின்றன. "ஒருபோகம்" "இருபோகம்" என்பது சட்ட பூர்வமான அர்த்தமுள்ள நிலப்பிரிவுகளானால் மூன்று போகம் விளைவு செய்யப்படும் நஞ்செய்களுக்கு என்ன பெயரிடப்பட்டு எவ்வாறு பாகுபாடு செய்யப்பட்டிருக்கிறது தவிரவும், சில பயிர்கள் நீடித்து இரண்டு பசலிகளுக்குள் (கொடிக்கால், வாழை, கருப்பு) நஞ்செய் நிலங்களில் விளைகின்றன இவைகள் எப்படி பாகுபாடு செய்யப்பட்டிருகின்றன? ஆகையால் ஒரு போக நஞ்செய் என்றால் ஒரு பயிருக்கு மாத்திரம் ஜலவுரிமையுண்டென்றும், இருபோக நஞ்செய்யென்றால் இரு போகத்திற்கும் ஜலவுரிமையுண்டென்றும் அர்த்தமில்லை. தவிரவும் கலெக்டரின் உத்திரவு அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரப்படுவதில் கஷ்டங்களிருக்கின்றன. சில ஆயக்கட்டுகள் இருபோக நிலங்களாகவே பூராவும் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன சில ஆயக்கட்டுகளில் சில நிலங்கள் ஒருபோகமும் சிலது இருபோகமாகவும் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன இவைகளைப் பிரித்து ஜலசப்ளை செய்வது சாத்தியமான காரியமில்லை. இந்த பெயர்களெல்லாம் தீர்வை கொடுக்க நிலச்சுவான்கள் சம்மதப்பட்டிருக்கும் முறையைக் குறிக்கும் பெயர்களே யொழிய அவர்களின் ஜலவுரிமையைக் குறிக்கும் பெயர்களல்ல. 2 வதாக ஒருபோக நஞ்சை சொந்தக்காரர்கள் முதலிலேயே இந்தக் காலத்தில் தான் தன்னுடைய ஒருபோக ஜல உரிமையை அநுபவித்துக்கொள்ள தீர்மானித்து அதிகாரிகளுக்குத் தெரிவிக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இது கொஞ்சமேனும் பொருத்தமில்லாதது காலங்களும், மழையும் சர்க்காரின் உத்திரவுகளுக்கு பயப்படாது எப்போது ஜல வசதி சரியாயிருக்கிறதோ அப்போதுதான் நிலச்சுவான்கள் பயிரிடுவார்கள் இந்தக் குறிப்பிட்ட காலத்தில்தான் வருஷா வருஷம் பயிரிட வேண்டுமென்று சொல்லுவது தவறு "கார்" "பிசான"மென்பது சவுகரியப் பெயர்களே ஒழிய அவைகளில் விசேஷ அர்த்தமொன்றுமில்லை கலெக்டரின் உத்தரவு மேலே கூறிய வண்ணம் நிலசுவான்களுக்கு ஹானியை உண்டுபண்ணத்தக்கதாக யிருப்பதாலும், ஜில்லா சங்கத்தார் இது விஷயமாய் பலத்த கிளர்ச்சிசெய்ய வேண்டுமென்றும் கமிட்டியார் அபிப்பிராயப்படுகிறார்கள்.

ச. மி.



# ராணாபிரதாபசிம்மன்.

அல்லது

## " ரஜபுத்திர தேச பக்தி."

(ஸ்ரீமான் S. மஹாலிங்க சர்மா சிறைவாசத்தில் எழுதியது)

[ All Rights Reserved ]

[ 81 வது பக்கம் தொடர்ச்சி ]

### நான்காவது அத்தியாயம்.

உதயபுரத்தின் அழகான வீதிகள் மாசிமாதத் திருவிழாவிற்காக நன்றாய் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன. தெருக்கள் தோறும் அழகாக தண்ணீர் தெளிக்கப்பெற்று சுத்தம் செய்யப்பட்டு கோலங்கள் போடப்பட்டிருக்கின்றன. வீடுகள்தோறும் தூய்மையான சுண்ணத்தினால் வெண்மை தீட்டப்பெற்று அழகியசித்திரங்கள் எழுதப்பட்டிருந்தன. மகர தோரணங்களும், பூர்ண கும்பங்களும் பொலிந்து விளங்கின. ஆங்காங்கு மரகதப் பந்தர்கள் போடப்பட்டு, வாழை கமுகு முதலியவற்றுடன் விளங்கின. அழகிய அன்ன பக்ஷிகள்போல் வெண்மையான கொடிகள் பறந்தன.

ராஜவீதியில் அரண்மனைக்கு சமீபத்திலுள்ள மூன்று அடுக்கு வைத்த அழகிய மாளிகை ஒன்றில் ஏராளமான ஜனங்கள் கூடியிருந்தனர். பெரியதோர் விருந்து அங்கு நடந்துகொண்டிருந்தது. ராணாவும், பத்மாவதியும் கூட அங்கு சென்றிருந்தனர். விருந்து முடிந்ததும், பற்பல வேடிக்கைகளும் களியாடல்களும் நடந்தன. எல்லாம் ஒருவாறு முடிந்ததும் அவரவர்கள் விடைபெற்று தத்தம் இருப்பிடம் சென்றனர். ராணாபிரதாபனும் மனைவியுடன் அரண்மனைக்கு போக எழுந்தான். உடனே சக்தி சிம்மன் மாளிகையின் வேறோர் பக்கத்திலிருந்து வந்து அரசனின் கையை பிடித்துக்கொண்டான்.

சக்தி:— அண்ணா! என்ன! தாங்களும் எல்லோரையும் போல் இப்போதே போய்விட வேண்டுமோ? நன்றாயிருக்கிறது! நான் வேறு வேலையாக இருந்தவன் தற்செயலாக இங்கு வராமல் இருந்திருந்தால், தாங்களும் மற்றவர்களைப்போலவே போயிருப்பீர்களன்றோ! மதனி[illegible]ர் எங்கே? முன்னமேயே அனுப்பி விட்டீர்களா? [illegible]ன், இவ்விடத்தை விட்டு போயிருக்கக்கூடாது.

பிரதாபன்:— சக்தா, எனக்கும் மற்றவர்களைப்போல் நீ உபசார வார்த்தைகள சொல்லவேண்டுமோ? இரவு முழுவதும் இங்கே இருந்து விடுவதானாலும் எனக்கு ஆக்ஷேபனை இல்லை. எனக்கு இன்று சரீரம் ஒரு மாதிரியாக இருக்கின்றது. சகோதரர்களாகிய நமக்குள் ஒருவருக்கொருவர் எங்கிருந்தால்தான் என்ன?

சக்தி:— அண்ணா! தங்களுடைய சரீரம் வர வர மெலிவடைந்து கொண்டே வந்திருக்கிறது. ஆம், நீங்கள் அதிகநேரம் உட்கார்ந்திருக்கவேண்டாம் சீக்கிரம் படுக்கைக்குச் செல்லுங்கள். பல்லக்கு காத்துக்கொண்டிருக்கிறது.

(உடனே பிரதாபன் எழுந்து தன் சகோதரனை அன்புடன் இறுகத்தழுவி) நீயும் படுக்கைக்குச் செல்லவேண்டிய நேரம் ஆகிவிட்டது. அதிக நேரம் விழித்துக்கொண்டிராதே. பிரபுக்களெல்லோரும் இன்று மிகச்சந்தோஷமடைந்தனர். அம்பிகையின் உற்சவமும் அழகாக நிறைவேறியது. எல்லா வருஷங்களையும் விட இவ்வருஷம் மகத நாட்டிலிருந்து கூட ஏராளமான ஜனங்கள் வந்திருந்தார்களாம். மணி 10 ஆகிவிட்டது நான் போய் வருகிறேன் என்று கூறி புறப்பட்டு அரண்மனைக்குச் சென்றான.

தமயனை வாயிற்படி வரையில் பின்சென்று வழியனுப்பிவிட்டு உள்ளே வந்தான் சக்தி சிம்மன். அவனுக்கு அப்பொழுது மிகக்களைப்பாக இருந்தது. உடனே மாடிக்குச்சென்று தன் சயனக்கிரகத்தை யடைந்தான். வெகு நேரம் வரையில் கட்டிலின் மீது புரண்டு கொண்டிருந்தான். அவனுக்கு அன்று என்ன காரணத்தினாலோ சரியாக தூக்கம் வரவில்லை சிறிதுநேரம் எழுந்து உட்கார்ந்து ஏவலாளனைக்கூவி தன் தாயை அழைத்து வரும்படி கட்டளையிட்டான். சிறிதுநேரத்திற்குள் அவளும் வந்து சேர்ந்தனள்.

தாயைக் கண்டதும் கட்டிலை விட்டிறங்கி வணங்கினன். இருவரும் கம்பளத்தின் மீது உட்கார்ந்தனர். முதலில்

சக்தன்:— அன்னாய் யான் எந்த அவசர காரியத்தை முன்னிட்டும் உன்னைக் கூப்பிடவில்லை. தூக்கம் வராமையால் சிறிதுநேரம் ஏதாவது பேசலாம் என்று அழைத்தேன். மூப்பினால் வாடியிருக்கும் உன்னை கஷ்டப்படுத்துவது கூடாதாயினும், அரண்மனையைப்பற்றிய சங்கதிகளை எல்லாம் நீ அறிந்திருப்பதுபோல் வேறுயாரும் அறியவில்லையன்றோ ?

தாய்:— ஆம், செல்வமே உனது தந்தை உதய மகாராஜா பட்டமேறிய 3-வது வருஷத்திலேயே அரண்மனை பணிப்பெண்களுள் ஒருவளாக என்னுடைய 12வது வயதிலே நான் அமர்ந்தேன். இப்பொழுது எனக்கு வயது 78 ஆகிறது. உன் தாய் இறந்து 14 வருஷங்களாகின்றன. அவள் இறக்கும்பொழுது நீ 5 வயதுக்குழந்தை. ஆனால் பிரதாபனுக்கு அப்பொழுது வயது 21. தாய் இறந்த பிறகு உன்னை பாதுகாக்கும் பொருட்டு என்னிடம் விடப்பட்டது. பிறகு தந்தையும் இறந்தார். என்பொருப்பு இன்னும் அதிகமாயிற்று. உன்னுடைய வாலிபக்கோலத்தையும் வீரத்தையும் கண்டு களிக்க பாக்கியமில்லாது உன் தந்தை இறந்தார். உன்னிடத்தில் அவருக்கிருந்த விசேஷ பிரீதிக்கு அளவில்லை. பிற்காலத்தில் புகழில் சிறந்த வீரராக நீ விளங்குவாய் என்று அவர் எதிர் பார்த்திருந்தார். அதற்கு காரணமும் சொல்கிறேன் கேள்.

அப்பொழுது நமது ராஜ குடும்பம் சித்தூரில் இருந்தது. மொகலாயர்களுடன் சண்டை அடிக்கடி நடந்து வந்தது. ஒரு நாள் அரசன் மன்னவையில் மந்திரிகள் சூழ வீற்றிருந்தான். கத்திகள் செய்வதைப்பற்றி பேச்சு ஆரம்பித்தது. கத்தியை வெகு அற்புதமாகச் செய்பவனுக்கு பரிசு கொடுக்கவேண்டும் என்று கருதினர் மந்திரி அவ்வாறு செய்வதனால் கத்திகள ஏராளமாக உயர்ந்த மாதிரியில் செய்யப்படுவதற்கு அனுகூலமுண்டாகுமென்பது அவருடைய நோக்கம். அரசன் உடனே அதற்கு சம்மதித்து நல்ல லக்ஷணங்கள் அமையப்பெற்ற கத்தியை செய்து அனுப்புபவனுக்கு நல்ல வெகுமதி அளிக்கப்படும் என்று கூறினர் ஊர் முழுவதும் அப்படியே பறையறைவிக்கப்பட்டது. சிலவாரங்கள் சென்றன. அநேக கத்திகள் செய்யப்பட்டு ராஜனின் பார்வைக்கு அனுப்பப்பட்டன. கடைசியில் ஒரு கத்தி வந்தது. அதைச்செய்தவன் மிகவும் போர்போன ஒரு தொழிலாளி அரசன் மந்திரி முதலிய எல்லோரும் அவனால் செய்யப்பட்ட கத்தியே மிகச்சிறந்தது என்று நினைத்தனர். பஞ்சுப்பொதிகளில் கத்தியைச்செலுத்தி பரீக்ஷை பார்க்கும் வழக்கம் அப்பொழுது உண்டு. ஒரு வேடிக்கையான சம்பவம் அப்பொழுது நடந்தது.

அரண்மனைக்குள் வேறு ஒரு இடத்தில் விளையாடிக்கொண்டிருந்த நீ தற்செயலாய் அங்கு தோன்றினாய். பலகையின்மீது இருந்த பளபளப்பான கத்தி உன் பார்வையை இழுத்தது. உடனே அதனை வெகு லாகவமாக கையில் கொண்டனை. அக்கத்தியை பரீக்ஷை செய்வது போல், அதனுடைய சக்தியை அறியாமலோ, அல்லது அதனை பொருட்படுத்தாமலோ, கத்தியை ஓங்கி ஒரு கையில் பிடித்து, மற்றொரு கையை நீட்டி அதன் மீது வேகமாக குத்திக்கொண்டாய். ராஜா முதலியவர்கள் அதிக பரபரப்படைந்து ஓடிவந்து நடந்ததை அறிந்து விசனித்தனர். ஆனால் நீ சிறு பிள்ளைக்குரிய துடுக்குடன் "கத்திகள் பஞ்சு மூட்டையை குத்துவதற்காக செய்யப்படுவதில்லையே! ரத்தத்தை வெளியே இழுக்கும் சக்தியைக்கொண்டன்றோ அவைகளை பொருக்கி எடுக்கவேண்டும்" என்று கூறினாய். கையிலிருந்து ரத்தம் பெருகி வழிந்து கொண்டிருந்தும், அதனைக் கவனியாது வீரம் பேசிய உன்னை ராஜா மார்போடு கட்டிக்கொண்டு, "செல்வக் குமரனே! உனது வீரம் குழந்தைப்பருவத்திலேயே வெளிப்படுகின்றது. "விளையும் பயிர் முளையிலே" என்பர். பின்னாளில் சிறந்ததோர் வீரனாய் புகழ் படைத்து வாழ்வாய்" என்று கூறினர். அன்று முதல் அவருக்கு உன்னிடத்தில் ஒருவிசேஷ பிரீதி ஏற்பட்டது.

சக்தி:—ஆம் நீ கூறியவரலாறு வெகு ஆச்சரியமாகவே இருக்கின்றது. என்னையே பற்றிய இந்த விஷயத்தை நீ இதுவரையில் என்னிடம் கூறாது இருந்தனையே! என்று கூறி, அதிக நேரம் ஆகிவிட்டதை அறிந்து செவிலித்தாயை அனுப்பிவிட்டு, நித்திரைபோனான்.

தாயும் படுக்கையறையை விட்டு கீழே இறங்கி தன் சொந்த அறையை அடைந்தனள். இரவின் பெரும்பாகம் கழிந்துபோய் விட்டது. அவளுக்கு சரியாக தூக்கமும் வரவில்லை. அவள் மனதில் பற்பல எண்ணங்கள் உதிக்க ஆரம்பித்தன.

தான் அன்று கூறிய விருத்தாந்தங்கள் சக்தனுக்கு மிகுந்த சந்தோஷத்தை கொடுத்திருக்குமாகிலும் அதனால் சில விரும்பத்தகாத விளைவுகள் ஏற்படக்கூடுமோ என்று அவளுக்கு சந்தேகம் உதித்தது. இயற்கையிலேயே சக்தன் சிறிது தற்பெருமையும்: பிடிவாதமும், மன உறுதியும் உள்ளவன் என்பதை அவள் அவனுடைய குழந்தைப் பருவத்திலிருந்தே நன்கு அறிவாள். தன்னுடைய பெருமைக்கு சிறிது பங்கம் ஏற்பட்ட போதிலும், அவன் அடங்காத ஆவேசமடைந்து மூர்க்கனாய் விளங்குவான் என்பதும் அவளுக்குத்தெரியும். தன்னுடைய அதிபால்யத்தில் தான்செய்த ஓர் அற்புதச்செய்கையை அறிந்தவுடன் அவன் தனக்கு இணையானவரில்லை என்று சிறிது அகம்பாவம் கொள்வனேயானால், அந்த அகம்பாவத்தின் காரணமாக அவனுக்குஆபத்துக்கள் ஏற்படுதல் சகஜம் என்று அவளுக்குப்பட்டது. அதனால்தான்சிறிதுமுன் யோஜனையுடன் நடந்திருக்கவேண்டியது அவசியம் என்றும் உணர்ந்தாள். மக்களிடத்தில் தீயகுணங்கள் குடிபுகா வண்ணம் காப்பதன்றோ தாய் தந்தையரின் கடன்.

எது எப்படியிருந்தபோதிலும் சக்தனுடைய மனதில் ஓர் தீர்மானமான உறுதி அன்றுமுதல் ஏற்பட்டுவிட்டது. "தன்னைப்போல் அதி சாமர்த்தியம் வாய்ந்த வீரர் ராஜஸ்தானத்திலேயே இல்லை" என்றும் தன்னை பந்தயத்தில் வீழ்த்துவதற்கு ஒருவனாலும் ஆகாது என்றும் அவன் தீர்மானித்திருந்தான். சிறிய விதையாக அவன் மனதில் தோன்றி யகர்வம்நாளடைவில் பெருத்தமரமாக தழைத்து வளர ஆரம்பித்தது. அவனிடத்தில் அகாரணமாக ஏற்பட்ட இந்த ஒரு கர்வத்தினால், மிகவாகரடு பெரியதோர் கஷ்டத்தை பின்னால் அனுபவிக்கும்படி நேரிட்டது.

பக்குவமானகாலத்தையறிந்து விஷயங்களைஒருவனுக்குச்சொல்லாமல் போனால் அவ்வார்த்தைகளால் விபரீதமான பலன்கள் ஏற்பட்டு வருவது சகஜமன்றோ! உலகமறியாது தற்பெருமையுடன் விளங்கும் வாலிபனொருவனிடத்தில் காலமறியாது கூறிய மொழிகள் கர்வத்தை உண்டு பண்ணின.

யுத்த ரங்கத்தில் தன் வலியறியாது தயங்கி நின்ற வானர குமாரனான அனுமானை அணுகி, ஜாம்பவான் அவருடைய பாலிய வீரச்செய்கையில் ஒன்றை எடுத்துக்காட்டி "பகலவனை ஓர் பழமென நினைத்து அவனை வாயினில் விழுங்கச்சென்ற அஞ்சனையின் குழந்தை நீங்களன்றோ" என்று கூறியவுடன் சமய உசிதமாக கூறப்பட்ட அம்மொழிகளால் அனுமான் நெஞ்சுருதியும் வீராவேசமும் அடைந்து கடப்பதற்கரிய பெருங்கடலையும் ஓர் காலத்தில் கடந்தனரன்றோ! சம புத்திபடைத்த குணசீலர்கள் தங்களைப் பிறர் புகழ்ந்த காலத்து மகிழ்ச்சியும், இகழ்ந்த காலத்து மனத்தாங்கலும் அடைவதேயில்லை. சாதாரண மனிதர்கள் புகழப்படும் கால் தலைதெரியாது உளம் மகிழ்ந்து அறிவிழந்து கர்வமடைந்து நிற்கின்றனர். அந்த கர்வத்தினால் விளையும் கேடுகள் பலவன்றோ!

(தொடரும்)

# கிராம உத்தியோகஸ்தர்கள். 2234

## நமது நிலைமையும், கடமையும்.

[ஸ்ரீமான் T. S. சொக்கப்பா முதலியார் கர்ணம் நெயக்குப்பை, செக்ரிடெரி, கு. தா. கி. உ. சங்கம்]

———x———

கிராம உத்தியோக சகோதரர்களே நாகரீகம் முதிர்ந்தபிரிட்டிஷ் ஆட்சிக்குட்பட்ட நம்மவர்களின் தற்கால நிலைமையை ஆராயப்புகு முன் நம் முற்காலத்திய நிலைமையைப்பற்றி சிறிது ஆராய்வோம்.

முற்காலத்தில் (ஆங்கில ஆட்சிக்கு முன்) கிராம உத்தியோகஸ்தர்களாகிய கர்ணம், கி. மு. இவர்களுக்கு இருந்த கௌரவம் அளவிடற்பாலதன்று ராஜாங்கத்துறையிலும் கிராம சமூக வாழ்விலும் இவர்கள் ஈடுபட்டு வந்திருக்கிறார்கள். கிராமங்களில் இவர்கள் யஜமானர்களாகவும் கிராமத்தார்களுக்கு மிகவும் அன்பிற்குரியவர்களாகவும் இருந்து வந்தார்கள். இவர்களுக்கு கட்டுப்பட்டு கிராமத்தார்களும் தங்கள் காரியங்களை நடத்தி வந்தார்கள். கிராமத்தில் இவர்களுக்கு அரசாங்கத்தாரால் மானியங்கள் ஏராளமாக விடப்பட்டிருந்தது இவர்களும் வாழையடி வாழையாக வம்ச பரம்பரையாய் மானியங்களை அனுபவித்துக்கொண்டு கிராமத்தார்களுக்கும் அரசாங்கத்தார்களுக்கும் வேண்டிய உதவிகளையும் ஏவல்களையும் செய்துவந்தார்கள்.

தற்காலம் (ஆங்கில ஆக்ஷி வந்தபிறகு) ஷை மானியங்களெல்லாம் நாளடைவில் எடுபட்டுப்போய் ரொக்க சம்பளம் ஏற்பட்டு மிகவும் கஷ்டங்களுக்கிலக்காகி நாம் மிக வருந்தி வருகிறோம்.

பிரிட்டிஷ் ஆட்சிக்கு கிராம உத்தியோகஸ்தர்களாகிய நாம்தான் அஸ்திவாரம் சகல பொருப்பும் நம்மிலிருக்கிறது நாம் செய்யவேண்டிய வேலைகளோ கணக்கில்லை இப்பொழுது நமக்குக் கொடுக்கப்பட்டு வருகிற சம்பளமோ மிகவும் சொற்பம் (ஒரு மனிதன் ஒரு நாளைக்கு முழு வயறுகூட சாப்பிடப்போதாத சம்பளம்) இப்பிரிட்டிஷ் ஆட்சியில் எத்தனை டிபார்ட்டுமெண்டுகள் இருக்கின்றனவோ அவ்வளவிலும் நமக்கு சம்பந்தமிருக்கின்றன வேலைக்குத் தகுந்த கூலி நமக்கு கிடையாது காரணம் என்ன! நம்மில் ஒற்றுமைக்குறைவும் முயற்சியின்மையுமே தான் காரணம்.

நாம் முன்போல் கௌரவமாகவும் ஜீவனத்திற்கு தகுந்த சம்பளமும் பெற்று வாழவேண்டுமானால் ஒரே மார்க்கம்தான் உண்டு. அதாவது கவர்ன்மெண்டு சட்டத்திற்கு அடங்கி சங்கத்தின் வாயிலாக நமது குறைகளை மேலான அதிகாரிகளுக்கு அடிக்கடி தெரிவித்து தகுந்த பரிகாரம் தேடிக்கொள்ளவேண்டியதே "தங்கத்தாலாகாதது சங்கத்தாலாகும்" என்பது ஆன்றோர் மொழி. நமது குறைகளை ஒருவரிருவர் முறையிட்டால் கேள்வி உண்டாகாது எல்லோரும் சேர்ந்து முறையிட்டால்தான் நன்மையுண்டாகும் அப்படி எல்லோரும் சேர்வதற்கு சாதனம் சங்கம்தான்.

சகோதரர்களே இனிக்காலந்தாழ்த்தாது அங்கங்கு சங்கங்களை ஸ்தாபித்து அடிக்கடி மீட்டிங்குகள் நடத்தி அதன் வாயிலாக நமதுகுறைகளை காருண்ய கவர்ன்மெண்டுக்கு தெரிவித்து தகுந்த பரிகாரம் தேடிக்கொள்ள வேண்டும். சங்கம் ஸ்தாபித்தாலும் மீட்டிங்குகளுக்குப் போனாலும் அதிகாரிகளின் ஆக்னைக்கு ஆளாகவேண்டுமென்று கவலைப்படாதீர்கள். நம் ராஜதானி சங்கமானது கவர்ன்மெண்டில் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது.

நாம் முன்பு சங்கத்தின் வாயிலாக கிளர்ச்சி செய்ததின் பலனை சொற்ப சம்பள உயர்வு ஏற்பட்டு நம் அயற்சியால் சிறிது குறைந்திருக்கிறது. இதை முன்போல உயர்த்துவதற்கு தகுந்த முயற்சி வேண்டும் "எத்தால் வாழலாம் ஒத்தால் வாழலாம்" என்பதற்கிணங்க நாம் அடிக்கடி மீட்டிங்குகள் நடத்தி நமது குறைகளை மேலாவுக்குத் தெரிவித்து தகுந்த பரிகாரத்தை தேடிக்கொள்ளவேண்டும்.

நம்மவர்களில் பிளவு ஏற்பட இடம் தரக்கூடாது சிலர் கர்ணத்திற்கு ஜாஸ்திவேலை என்றும் கிமுவுக்கு ஜாஸ்தி பொறுப்பு என்றும் தத்தமக்கு ஜாஸ்தி சம்பளம் கொடுக்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டு நம் முன்னேற்றத்திற்கு பெருந்தடங்கலாயிருந்து வருகிறார்கள் அந்தோ இவர்களின் அறியாமை என்னே! சகோதரர்களே மேலே கண்டவர்களின் பேச்சிலும் செய்கைகளிலும் மனத்தைச் செலுத்தாதீர்கள்.

நம் குறைகளை கவனித்து தகுந்த பரிகாரம் தேடிக்கொடுக்கவும் கவர்ன்மெண்டு உத்திரவுகளையும் சட்டதிட்டங்களையும் நமக்குத்தெரியப்படுத்தவும் இன்னும் நமக்குத் தேவையான புத்திமதிகளைப் புகட்டவும் ஒரு அரிய நண்பன் தோன்றி இருக்கிறான் அவன் யாரெனில் "கிராமானுகூலன்" என்னும் ஒப்பற்ற ஒரு மாதாந்தர சஞ்சிகை.

சகோதரர்களே! நாமெல்லோரும் மேலேகண்ட சஞ்சிகையை தவறாமல் வரவழைத்து அதில் வெளிவரும் விஷயங்களை செவ்வனே தெரிந்து அதன்படி ஒழுக வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

ஷை சஞ்சிகையானது நாளுக்கு நாள் விர்த்தியாகி நம் மனோபீஷ்டங்களை நிறைவேற்றிக் கொடுக்கவும் ஷை சஞ்சிகையின் ஆசிரியர் ஸ்ரீமான் N. ஆபத்ஸகாய ஐயருக்கும் ஷை சஞ்சிகைக்கும் நீண்ட ஆயுளையும் வன்மையையும் கொடுக்குமாறும் கிராம உத்தியோக சகோதரர்களுள் சிநேக பான்மையும் ஒற்றுமையும் மென்மேலும் பெருக உண்டாகவேணுமாய் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன். முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்.

சீர்பூத்த செங்கமலச் செல்வி திருவருளால்
ஏர்பூத்த வெண்பிறை என்ன விளங்கிப் பாவிஎழும்
கார்பூத்த கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கங்களும்
தார்பூத்த வேந்தனும் தன்மேன்மையுமன்புடன்வாழியவே

சுபம்! சுபம்!! சுபம்!!!



# ஜமாபந்தி.

கூடலூர் தாலூக்கா ஜமாபந்தி கூடலூர் ரிவினியூ டிவிஷனல் ஆபீஸரால் நடைபெற்று வருகின்றது. முந்தின வருஷத்தைப்போல் இவ்வருஷத்திலும் காலாகாலங்களில் மழையில்லாமல் கதிரவன் கொடுமையால் பயிர்கள் சாவியாகப்போனது எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. ஜமாபந்தி ஆரம்பித்த சமயத்தில் டிவிஷனல் ஆபீஸராக இருந்த ஸ்ரீமான் திருவேங்கட முதலியார் தாம் ஜமாபந்திசெய்த 4.5 கிராமத்திலும் குடிகள் கேட்டிருந்த தீர்வையில் 100க்கு 50க்குக் குறையாமல் வஜா செய்ததாகத் தெரிகிறது. அவர் திண்டிவனம் மாற்றப்பட்டு அவருக்குப் பதிலாக ஜனாப் சுல்தான் மொஹிதீன் மேக்கரி சாயபு உத்தியோகஸ்தராக வந்திருக்கிறார். தீர்வை வஜாசெய்ய வேண்டுமென்று போட்டிருக்கும் விண்ணப்பத்தின்பேரில் நாளது வரையில் ஒரு பைசாகூட வஜாவானதாகத் தெரியவில்லை இதே தாலூக்காவில் சென்ற வருஷத்தில் ரூ 20,000-த்துக்குமேல் வஜா வாயிருக்கிறது. இது விஷயம் ஜில்லா கலெக்டரும் போர்டாரும் கவனிப்பார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்துடனில்லாமல் கணக்குகளில் கைப்பிசகாய் ஏதேனும் ஒரு சிறிய தப்பு இருந்தாலும் தப்பு ஒன்றுக்கு ரூபாய் ஒன்று வீதம் ஒவ்வொரு கிராம உத்தியோகஸ்தர்களும் சுமார் ரூபா 10-க்குக் குறையாமல் அபராதம் கொடுக்கிறதாகவும் தெரிகிறது சொல்ப சம்பளமுள்ள கிராம உத்தியோகஸ்தர்கள் இப்படி நபர் 1-க்கு ரூபா 10-க்குக் குறையாமல் அபராதம் கொடுத்தால் அவர்கள் ஜீவனம் எப்படி செய்வது; இத்துடன் நிற்காமல் ஜனாப் சாயப்புக்கு கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தர்கள் மீதெல்லாம் அவநம்பிக்கை உண்டாயிருக்கிறது. நேற்றைய தினம் காலையில் திடீரென்று தம் வீட்டை விட்டுக்கிளம்பி ஒரு சேவகன் சகிதம் தாலூக்கா ஹெட் அக்கௌண்டண்டு வீட்டிற்குள் போலீசார் சோதனைக்கு நுழைகிறாப்போல் நுழைந்து, தாங்கள் வீட்டில் கணக்குகள் ஏதாவது தணிக்கை செய்து கையெழுத்து போடுகிற வழக்கம் உண்டா என்று கேட்க, அவரும் தாலூக்காவில் ஜானு வேலை இரவு சுமார் 10 அல்லது 11-மணி ஆகிறது, காலை நேரத்தில் ஒழிந்த நேரத்தில் கணக்குகளைப் பார்த்து கையெழுத்து போடுகிறது வழக்கம்தான்; இப்படித்தான் மாமூலாக நடந்துகொண்டிருக்கிறதென்று சொல்ல, ஆபீஸர் அவர் மீது கோபம் கொண்டு அவர் நடத்தை சந்தேகத்திற்கிடமாக இருக்கிறதென்றும், இனி அம்மாதிரி செய்யக்கூடாதென்று சொல்லிவிட்டு ரூபாய் ஐந்து அபராதம் போட்டுவிட்டார். இவ்வருஷம் ஜமாபந்தியானது இந்த தாலூக்காவில் கடபுடலாக இருக்கிறது. ஜமாபந்தி முடிவாகும் தறுவாயில் நேற்றையதினம் ஜமாபந்திக்கு வந்திருக்கும் கிராம உத்தியோகஸ்தர்களையும் குடிகளையும் தன் ஆபீஸில் வைத்துக்கொண்டு சுமார் அரை மணிநேரம் குடிகள் தாலூக்கா ஆபீஸில் கலெக்டராபீஸ் குமாஸ்தாக்களுக்கு லஞ்சம் கொடுக்கக் கூடாதென்றும், கிராம உத்தியோகஸ்தர்கள் ஒரு பைசாகூட "மாமூல்" என்று வாங்கக் கூடாதென்றும் உபதேசம் செய்துவிட்டு அடியில் கண்ட சர்குலரை ஒவ்வொரு கிராம உத்தியோகஸ்தர்களுக்கும் அனுப்பச்செய்யும்படி உத்திரவிட்டார்:—

## எச்சரிக்கை.

"ஜமாபந்தி மாமூல் என்று கிராம கணக்கர் மணியகாரர்கள் குடிதனக்காரர்களிடம் பணம் வசூல்செய்து பிர்கா ரிவினியூ இன்ஸ்பெக்டருக்கும் குமாஸ்தாக்களுக்கும் பணம் கொடுப்பதாக நம்முடைய நமூதுக்கு வந்திருக்கிறது. இந்தப்படி கொடுப்பது சுத்த தப்பு இது சட்டத்திற்கு விரோதமானது. எந்த கிராம நவுக்கர்களும் இனிமேல் ரிவினியூ இன்ஸ்பெக்டருக்கு அல்லது தாலூக்கா உசூர் குமாஸ்தாக்களுக்காவது ஜமாபந்திக்காக ஒரு பைசா கொடுக்கக்கூடாது. அப்படிப் பணம் கொடுக்கும்படி ரிவினியூ இன்ஸ்பெக்டராவது அல்லது குமாஸ்தாக்களாவது நிர்ப்பந்தம் செய்தால் அது விபரத்தை உடனே நமக்குத் தெரிவிக்கவேண்டியது. சட்டப்படிக்கு லஞ்சம் கொடுத்தவரும் லஞ்சம் வாங்கினவரும் தண்டனைக்குட்படுவார்கள். ஆகையால் இனிமேல் எந்தக்கணக்கு மணியகாரராவது ஜமாபந்தி மாமூல் என்கிறகெட்ட வழக்கத்தை அனுசரித்து சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்குப் பணம் கொடுத்ததாக நம்முடைய நமூதுக்கு வந்தாலும் அல்லது குடிகளிடமிருந்து ஜமாபந்திக்காகப் பணமாவது அல்லது சாமான்களாவது வசூல்செய்ததாக ஏற்பட்டாலும் அவர்கள் வேலையிலிருந்து நீக்கிவிடுவதோடும் கூட சட்டப்படிக்கு கிரிமினல் தண்டனைக்கும் உள்படுவார்கள் என்பதை கண்டிப்பாய் அறியவும்."

# திருக்கோவலூர் தாலூகா
## கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கம்

[செக்ரடேரி எழுதுகிறார்.]

22-4-1928ல் திருக்கோவலூர் பெருமாள் கோயில் தாயார் சந்நிதியில் ஷை சங்கத்தின் ஸ்பெஷல் மீட்டிங் எம்பேர் கர்ணம் ஸ்ரீமான் ஒ. நடேச ஐயர் அக்கிராசனத்தின் கீழ் கூடியது. 54 அங்கத்தினர்கள் விஜயஞ் செய்திருந்தனர். அடியில் கண்ட தீர்மானங்கள் செய்யப்பட்டன.

தற்போது நடைபெற்றுவரும் ஜமாபந்தியின் பொருட்டு எல்லா கிராமத்திய கணக்கப்பிள்ளைகளும் கஸ்பாவிற்கு வரவேண்டியிருக்கிறது. சொற்ப சம்பளமுடைய கர்ணங்கள் கஸ்பாவிற்கு வந்தால் இருபது நாளைக்குக் குறையாமல் மிகுந்த கஷ்டப்பட்டுக்கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. அதனால், கணக்கப்பிள்ளைகளுக்கு நேரும் பொருள் நஷ்டமும், கஷ்டமும் சொல்லி முடியாததாக இருக்கிறது. ஆகையால் இனி கர்ணங்கள் கஸ்பாவிற்கு வந்து தாலூகா ஆபீஸில் தணிக்கை போட்டுக்கொண்ட தேதியிலிருந்து 3-தினங்களுக்கு மேலும் டிவிஷன் ஆபீஸில் தணிக்கை போட்டுக்கொண்ட தேதியிலிருந்து இரண்டு தினங்களுக்கு மேலும் எவ்வித காரணத்தைக்கொண்டும் நிறுத்தி வைக்காமல் அனுப்பிவிடவேண்டுமென்று கனம் டிப்டி கலெக்டர் அவர்களை டெபுடேஷன் மூலம் சென்று விண்ணப்பித்துக்கொள்ள வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

கிராம கர்ணங்களால் சப்டிவிஷன் செய்யப்பட்ட சிகார்டுகள் சாங்ஷனான பிறகு, மெஷர்மெண்டு புஸ்தகத்தில் ரிவினியூ இன்ஸ்பெக்டர் அவர்களால் பிளாட் செய்யப்படுகிறது.

சப்டிவிஷன் செய்வதற்காக பார்டிகளால் வசூலாகும் தொகையில் பாதி கர்ணங்களுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் சில கிராமங்களில் ஷை தொகைக்கு ரிவினியூ இன்ஸ்பெக்டர் அவர்களால் உடனே பில் கொடுக்கப்படாமல் தாலூகாவுக்கு ஜமையாய் விடுகிறது. இனி அவ்வாறு செய்யாமல் பீல்டு மெஷர்மெண்டு புஸ்தகத்தில் ரிவினியூ இன்ஸ்பெக்டரவர்களால் பிளாட் செய்தவுடனே ரிவினியூ இன்ஸ்பெக்டரவர்கள் கிராமத்தை விட்டுப்போகுமுன் கர்ணங்களுக்கு பில் கொடுத்துவிட வேண்டுமென்றும், ஷை பில்லை கிராம சிப்பந்திகள் மூலம் தாலூகாவிற்கு அனுப்பினால் அவர்கள் மூலமாகவே பட்டுவாடா செய்யும்படி உத்திரவு பிறப்பிக்கவேண்டுமென்றும் கனம் டிப்டி கலெக்டரவர்களைக் கேட்டுக்கொள்ள வேண்டுமெனத் தீர்மானிக்கப்பெற்றது.

ரிவினியூ இன்ஸ்பெக்டர், டிப்டி தாசில்தார், தாசில்தார் முதலிய அதிகாரிகள் கிராமங்களில் அஜிமாஷ் செய்யுங்காலங்களில் அடங்கல் முதலிய கணக்கு புஸ்தகங்களில் ஆங்கிலத்தில் ஷரா எழுதி விடுகிறார்கள். அதனால் கிராம கர்ணங்கள் கணக்கு தயாரிக்குங்காலங்களில் ஷை ஷராவிலுள்ள விஷயங்கள் இன்னதென உணராமல் மிகுந்த கஷ்டப்படுகிறார்கள். இனி அவ்வாறின்றி தாய்பாஷையாகிய தமிழிலேயே எழுதப்பட வேண்டுமென இச்சங்கம் சென்ற 4-4-24ல் டெபுடேஷன் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டு, உத்திரவாகி அதன்படி சிலகாலம் நடந்து வந்தது. தற்போது சில அதிகாரிகள் ஷை உத்திரவை உபேக்ஷை செய்து ஆங்கிலத்தில் எழுதி விடுவதால் கர்ணங்கள் மிக்க இடர்ப்படுகின்றனர்.

ஆகையால் ஷை உத்திரவைப் புதுப்பித்து மீட்டும் தமிழிலேயே ஷரா எழுதும்படி உத்திரவு பிறப்பிக்க வேண்டுமென கனம் டிப்டி கலெக்டரவர்களைக் கேட்டுக்கொள்ளவேண்டுமெனத் தீர்மானிக்கப்பெற்றது.

கிராம உத்தியோகஸ்தர்களுக்கு சப்ளை செய்யப்பட்டு வந்த காகிதம், பேனா, பென்சல் முதலிய ஸ்டேஷனரி சாமான்களும், கணக்கு தயாரிக்க வேண்டிய பாரங்களும் சென்ற இரண்டு வருஷங்களாக சப்ளை செய்யப்படாமையால் மிகுந்த கஷ்டமாகவிருக்கிறது. நாளது வருஷத்தில் ஜமாபந்தி பாரங்களுக்கும், 5 செ. முதலிய கணக்குகளுக்கும் வெற்றுக்காகிதம் விலைக்கு வாங்கி கணக்கு தயார்செய்து கொள்ளும்படி சொல்லிவிட்டார்கள். இதனால் கர்ணங்களுக்குப் பொருட்செலவும் தேக கஷ்டமும் அதிகப்படுகிறது ஆகையால் வழக்கம்போல் ரெவினியூ இன்ஸ்பெக்டர் அவர்கள் மூலமாய் பாரங்களும், ஸ்டேஷனரி சாமான்களும் சப்ளைசெய்து கர்ணங்களின் கஷ்டங்களை நீக்கவேண்டுமென கனம் டிப்டி கலெக்டரவர்களைக் கேட்டுக்கொள்ள வேண்டுமெனத் தீர்மானிக்கப்பெற்றது.

தோட்டி தலையாரி முதலிய கிராம சிப்பந்திகளில் ஒருவரை கணக்கப்பிள்ளையிடம் நிலங்களை அளத்தல் முதலிய தொழிலுக்கு ஒத்தாசையாக வசூல் காலங்கள் உள்பட ஸ்திரமாய் விடப்படவேண்டுமென உத்திரவாயிருந்தும் சில மணியக்காரர்கள் அவ்வாறு விடாமல் அடம் செய்கின்றனர். அதனால் கிராமங்களில் சச்சரவு நேரிடுகிறது. அவ்வாறு நேரிடாவண்ணம் ஒரு சிப்பந்தியை விட்டுவைக்க வேண்டுமென்று கண்டிப்பாய் உத்திரவு பிறப்பிக்க வேண்டுமென கனம் டிப்டி கலெக்டரவர்களைக்



கேட்டுக்கொள்ளுவதாக தீர்மானிக்கப்பெற்றது.

வசூல் சம்பந்தமான வேலைகளில் வசூல் செண்டருக்கு மணியக்காரர் கணக்கப்பிள்ளை சகிதம் வரவேண்டுமென உத்திரவு பிறப்பிக்கின்றனர். அதனால் கணக்கப்பிள்ளைகள் செய்யவேண்டிய பலவேலைகள் குந்தகமாகிறது. அன்றியும் மணியக்காரருக்கு வசூல் சமயத்தில் மித மிஞ்சின உதவிபுரிய வேண்டுமென உத்திரவு பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. வசூல் காலத்தில் 16 செ. கணக்கு தயார்செய்து கொடுக்கவும், மாதமொரு முறை பாக்கிப்பட்டி எடுத்துக்கொடுப்பதற்கும், மாசூல் ஜப்தி, நிலஜப்தி கேஸ்களுக்கு வேண்டிய சர்வே நெம்பர்களைக்கொடுக்கவும் உள்ள உரிமைகள் தவிர மற்ற உரிமைகளை மணியக்காரருக்கே பொறுப்பாக வைத்துவிடவேண்டும். அன்றியும் ஆடிட்டு காலங்களில் கணக்குகள் தயாரிக்கவும், தாலூகா ஆபீஸுக்கு வந்து தணிக்கை செய்யவும், கணக்கப்பிள்ளைகளே ஜவாப்தாரியாகவிருக்கிறார்கள். அவ்வாறின்றி கணக்கு தயார்செய்ய வேண்டியகடமை கணக்கப்பிள்ளைகளைப் பொருத்ததாகவும், தாலூகாவுக்கு வந்து தணிக்கை செய்யவேண்டிய கடமை மணியக்காரர்களை பொருத்ததாகவும் இருக்கவேண்டுமென்றும் எவ்வித காரணத்தைக் கொண்டும் ஆடிட்டு விஷயமாய் திருக்கோவலூருக்கு கர்ணங்கள் வரக்கூடாதென்கிற உத்திரவு பிறப்பிக்கும்வண்ணம் கனம் டிப்டி கலெக்டரவர்களைக் கேட்டுக் கொள்ள வேண்டுமெனத் தீர்மானிக்கப்பெற்றது.

மேற்கண்ட இத்தீர்மானங்களை அச்சிட்டுக்கொண்டு 25-4-28ல் கனம் டிப்டி கலெக்டர் அவர்களிடம் டெபுடேஷன் மூலம்சென்று விண்ணப்பித்துக்கொள்ள வேண்டுமென காரியதரிசிக்கு உத்திரவளிக்கப்பட்டது.

### டெபுடேஷன்.

28-4-28 காலை 8 மணிக்கு செக்ரடரியும் இதர கிராம உத்தியோகஸ்தர்களும் ரெவினியூ டிவிஷனல் ஆபீஸராகிய மிஸ்டர் R. D. பால், M. A. அவர்களிடம் டெபுடேஷனாக சென்று தங்களுடைய குறைகளைச்சொல்லிக்கொண்டதில் அவர் விஷயங்களை பொருமையுடன் கேட்டுக்கொண்டு, மகா-ள-ள-ஸ்ரீ தாசில்தார் டிப்டி தாசில்தார் இவர்களுடன் கலந்து ஆலோசித்து தகுந்த உதவிபுரிவதாக வாக்களித்தார்.

கவனியுங்கள்! போலிச்சரக்குகளை வாங்கி ஏமாறுதீர்கள்!!

தென்னிந்தியா நெசவுசாலை,
கும்பகோணம்.

பலவிதமான டவல்கள், ஷர்ட்டிங் பீஸ்கள், தோத்தி வகையறுக்கள் ஷை நெசவுசாலையில் தயாராகின்றன. மேற்கண்ட S. R. S. டிரேட் மார்க்குள்ள சரக்குகளையே கவனித்து வாங்குங்கள். நாணயத்திற்கும் உறுதிக்கும் உத்தரவாதமுள்ளதாயிருக்கும். டிரேட் மார்க்கில்லாத சரக்குகளை வியாபாரிகள், S. R. S. டவல் என்று சொன்னால் நம்பி மோசம்போகாதீர்கள். ஷை நெசவுசாலையிலேயே கதர் வேஷ்டிகளும் கதா துண்டுகளும், கதர்சட்டை பீஸ் தினுசுகளும் தயாராகின்றன.

S. R. சுந்தரமய்யர்,
புரோப்ரைட்டர்.

223469

# Balachandra Tooth Powder

## பாலச்சந்திர பற்பொடி.

**20-வருஷகாலமாய் பிரசித்தி பெற்றது.**

கல்நார்பஸ்பம் முதலிய சுதேச அவுஷத முறையையும் கார்பாலிக் ஆஸிட் முதலிய இங்கிலீஷ் முறையையும் அனுசரித்து அநேக சாக்குகளைக்கொண்டு மிகுந்த பிரயாசையுடன் தயார் செய்யப்பட்டிருக்கிறது. அநேக கனதனவான்கள், டாக்டர்கள், உத்தியோகஸ்தர்கள், வக்கீல்கள், வியாபாரிகள், முதலானவர்களால் நன்குமதிக்கப்பட்டு நற்சாக்ஷி பத்திரமும் அளிக்கப்பட்டிருக்கிறது.

BALACHANDRA TOOTH POWDER : B.C.T. HALL KUMBAKONAM : TRADE MARK

பல் ஊற்றையை போக்கும்,
பல்லை வெளுமையாக்கும்.
பல்வலியை தீர்க்கும்.
பல்ஆட்டத்தை நிறுத்தும்.
வாய் நாற்றத்தை தொலைக்கும்.
பரிமள வாசனையை கொடுக்கும்.
பல்லிலுள்ள கூச்சத்தை நிவர்த்திக்கும்.
பல்லை கெட்டிப்படுத்தும்.
பல்லில் ரத்தம்வராமல் தடுக்கும்.

பல் சம்மந்தமாய் உள்ள சகல வியாதியையும் போக்கி பல்லை நிலை நிறுத்தக்கூடிய அருமையான குணங்களடங்கியதும் சுமார் 3-மாசத்துக்கு உபயோகிக்கக்கூடியதுமான டப்பி 1-க்கு அணா 3-தான்.

ஜாஸ்தி லாபத்தை அபேக்ஷிக்காமல் விலை உயர்ந்த சாமான்களைக்கொண்டு அருமையாய் தயார்செய்யப்பட்டிருக்கிற இந்த பாலசந்திர பற்பொடியை சிறுவர்கள் முதல் ஆண் பெண் சகலமானவர்களும் உபயோகித்து குணமடைவதுடன் இச்சிறு கைத்தொழிலையும் ஆதரிக்கவேணுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வியாதி வந்தபின் வைத்தியனை தேடுவதைவிட வியாதியே வாராமல் தடுப்பதுதான் முக்கியமானது.

| | | |
|---|---|---|
| டப்பி 1-க்கு | | 0—3—0 |
| டப்பி 6-க்கு தபால் சார்ஜ் உள்பட | | 1—4—0 |
| டப்பி 12-க்கு | Do | 2—4—0 |

வியாபாரிகளுககு தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

வேண்டுபவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர், கிராமானுகூலன்
மருதாந்தநல்லூர், திப்பராஜபுரம் போஸ்டு.

மணம் மிகுந்தவை ! குணம் நிறைந்தவை !!

# ஜெயலெக்ஷ்மி அண்டு கோ.,

## அத்தர் வியாபாரம்,

## பெரியகடைத்தெரு, கும்பகோணம்.

முக்கிய கவனிப்பு.

இதனால் தெரிவித்துக்கொள்வது யாதெனில் :—எங்களால் தயாரிக்கப்படும் ஸாமான்கள் மற்றவர்களைப்போல் வீணை படாடோபமன்னியில் ராஜாங்க பண்டிதர்களால் கையாளப்பட்டுவந்த முறைகளில் சொல்லியபடிக்குள்ள மூலிகை சரக்குகள் பூராவையும் சேர்த்து செய்பாகம் தவராது உயர்ந்தமாதிரியாக மணம், குணம், நலம் இம்மூன்றும் ஒற்றி ருக்கும்படித் தயாரித்து நேயர்களுக்கு நன்மையைச்செய்து அதனால் நாங்கள் தக்க ஸர்டிபி கேட்டுகளும் பெற்றிருக்கிறோம ஸ்ரீமான்கள் அன்புடன் நமது வாஸனைசாலைக்கு விஜயம் செய்து நேரில் பார்த்துக்கொண்டு தங்கள் சிநேகிதர்களுக்கும் நமது வாஸனைசாலையைப்பற்றி சிபார்சுசெய்து நல்லாதரவு அளிக்கும்படி வேண்டுகிறோம்.

## சி. சாமி அண்டு சன் வயலட் காபியிங் பென்சலை

## உபயோகியுங்கள்.

## ஒருமுறை வாங்கி உபயோகித்தால்

## இதனுடைய உண்மை விளங்கும்.

### ஸி. சாமி அண்டு சன்.,

ஜெனரல் மெர்ச்செண்ட். & அக்கவுண்ட் புக் மேக்கர்ஸ்,

நே. 242, சைனபஜார் ரோட், G. T. மதறஸ்.

சந்தா நேயர்களே !

அடியிற்கண்ட கனவான்கள் "கிராமானுகூலன்" சந்தாத் தொகையை வசூலித்துக் கொடுப்பதாக அன்புடன் இசைந்துள்ளார்கள் அவர்களிடம் நமது ரசீது புஸ்தகம் கொடுக்கப்பட்டி ருக்கிறது. தங்கள் சந்தா தொகையை ஷை யார்களிடம் கொடுத்து ரசீது பெற்றுக்கொள்ளலா மென்று தெரிவித்துக்கொள்ளுகிறோம். இதனால் மணியார்டர் கமிஷன் லாபமாகும்.

ஸ்ரீமான் G கிருஷ்ணஸாமி அய்யர், கர்ணம், அன்னவாசல், காரியதரிசி, கி.உ. சங்கம், மன்னார்குடி.
ஸ்ரீமான் G. சுந்தரராமய்யர், காரியதரிசி, கி.உ. சங்கம், கர்ணம், சித்திரையூர்.
ஸ்ரீமான் கோபாலகிருஷ்ணய்யர், வைஸ்பிரசிடெண்டு, கி. உ. சங்கம், கர்ணம், பழயனூர்.
ஸ்ரீமான் V. M. சந்தானமய்யங்கார், கர்ணம், காளாச்சேரி.
ஸ்ரீமான் T. R. ராமச்சந்திரய்யர், கர்ணம், விக்கிரபாண்டியம்.
ஸ்ரீமான் V. சுப்பராமய்யர், காரியதரிசி, கி. உ. சங்கம், தஞ்சாவூர்.

Regd. No. M. 1930 கிராமானுகூலன். Annual Subscription Rs.

மணத்தின் ஊற்று ! வாசனையின் வித்து !!

# பரிமளப் பொக்கிஷம்

எது ?

கும்பகோணம் பெரியகடைவீதி

## K. அப்துல் ரஹிமான் ஸாகிப் & ஸன்ஸ்,

## பரிமளச்சாலை.

எமது பரிமளச்சாலையில் பரிமள வாசனைத்திரவியங்கள் எமது முன்னோர்களின் முறைப்படி அனுபவம் வாய்ந்த எங்களால் தயார்செய்து வழங்கப்பட்டுவருவது யாவரும் அறிந்ததே. எமது பாரம்பரை வியாபாரப் பெருமையும், சாமான்களின் உயர்ந்த மணமும் அரசர்கள் ஜமீன்தாரர்கள், பிரபுக்கள், உயர்தர உத்தியோகஸ்தர்கள் மற்றைய நல்லோர்கள் பலராலும் கௌரவிக்கத்தக்கது என்பது ஒரு முறை வாங்கி அனுபவித்தவர்களுக்கு நன்கு விளங்கும். எம்மிடமுள்ள சகல பரிமளச்சாமான்களும் முனிசிரேஷ்டரான ஷேக்பரீத் சக்கரகஞ்ச் அவுலியா அவர்களால் தயாரிக்கப்பட்டு அனுபவசித்திபெற்றன. எமது முன்னோர்கள் டில்லி அக்பர் சக்கிரவர்த்தியாருக்கும், தஞ்சை மன்னர்பிரானுக்கும் பரிமளப் பொருளை வழங்கினர்களென்பதையும், அம்முறைப்படியே நாம் இப்பொழுதும் தயாரித்து வருகிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம். [கேட்லாக் இனாம்.]

### எங்களிடம் கிடைக்கக்கூடிய புஸ்தகங்களின் கிரய ஜாப்தா.

| புஸ்தகங்களின் விவரம். | ரப்காகிதம். | கிலேஸ் காகிதம். | கான்கரர் காகிதம். |
|---|---|---|---|
| வட்டி விவரவிளக்கம் என்னும் வட்டிஜந்திரி முதல் பாகமும், இதில் 1927 அக்ஷயவருஷத்தோடு முடிவான 60 வருஷங்களுக்கு தேதிஜந்திரியும் அடங்கிய ஒரே பயிண்டு (பக்கம்-250) ... ... ... ... | 1 4 0 | 1 8 0 | 2 8 0 |
| வட்டி விவரவிளக்கம் என்னும் வட்டிஜந்திரி இரண்டாவது பாகம் இதில் தேதிஜந்திரி கிடையாது. (பக்கம்-400) ... | 2 0 0 | 8 0 0 | 4 0 0 |
| ஷை இரண்டு புஸ்தகங்களும் ஒரே பயிண்டில் (பக்கம்-650) | 3 0 0 | 4 0 0 | கிடையாது |
| நிலத்தீர்வை ஜந்திரி (பக்கம்-200) ... ... | 1 4 0 | 1 8 0 | 2 8 0 |
| சம்பளக்கணக்கு ஜந்திரி (பக்கம்-32) ... ... | 0 6 0 | 0 8 0 | 1 0 0 |
| 1927-ம் ௵ பிரபவ௵ முதல் 60 வருஷங்களுக்கு தேதிஜந்திரி (பக்கம்-120) ... ... ... | 0 12 0 | 1 0 0 | 2 0 0 |
| மேற்கண்ட 120 ௵ங்களின் தேதிஜந்திரியும் ஒரே பயிண்டு செய்தது (பக்கம்-240) ... ... ... | 1 4 0 | 1 8 0 | 2 8 0 |

வி. பி. செலவு தனி.

தேதிஜந்திரி, சென்ற 60 வருஷங்களுக்கு வேறாகவும், நடைமுதல் 60 வருஷங்களுக்கு வேறாகவும் இருப்பதால் வேண்டியவர்கள் இன்னநம்பர் இன்னகாகிதம் இன்னவிலையுள்ளது தேவை என்றும், தங்கள் விலாசங்களைத் தெளிவாயும் அடியிற்கண்ட விலாசதாரருக்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

T. M. பஞ்சாபகேசய்யர், கும்பகோணம்.

Printed at the Sri Kamakshi Amman Press and Published by N. Apa' sagaya Aiyer at Kumbakonam.